பக்கங்கள்: மொத்தம் 58

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 02 ஞாயிற்றுக்கிழமை (18.12.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 022




# மனித உரிமைகள் அமைப்புகளால் ஆணைக்குழு அறிக்கை நிராகரிப்பு

## குற்றம் நடந்தமை உறுதிப்படுத்தப்பட்டதால் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 18

இலங்கையில் இராணுவத்தினர் குற்றமிழைத்தனர் என்பதை, ஜனாதிபதி நியமித்த நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு உறுதிப்படுத்தி உள்ளதால் மனித உரிமை மீறல்கள் குறித்த மேலதிக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று மனித உரிமை அமைப்புக்கள் வலியுறுத்தி உள்ளன. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை கடுமையாக விமர்சித்துள்ள மனித உரிமைக் குழுக்கள், போர்க் காலத்தில் இடம்பெற்ற குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கான வழிகாட்டல்களை வழங்க நல்லிணக்க ஆணைக்குழு தவறிவிட்டமையானது சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தி உள்ளது என்றும் தெரிவித்துள்ளன.

2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையினைத்

பக் 23







## ஆலயத் தேர் முட்டிக்குள் ஆயுதங்கள்; கைதானவர் நேற்றுமுன்தினம் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலயத் தேர் முட்டிக்குள் ஆயுதங்களை மறைத்து வைத்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் மூன்று வருடங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குற்றம் நிரூபிக்கப்படாததால் விடுதலை செய்யப்பட்டார்.

அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலய

பக் 04

## நாடாளுமன்றில் ஒழுக்கம் பேண தெரிவுக்குழு

நாடாளுமன்றம்,டிசெ.18

நாடாளுமன்றத்தின் இறைமை, மரபு, ஒழுக்கம் என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் பரிந்துரைகளை வழங்குவதற்கும், கண்காணிப்பதற்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

21-11-2011 அன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த வேளையில் உறுப்பினர்கள் நடந்து கொண்ட விதம் நாடாளுமன்றத்தின் கறை படிந்த வரலாறாகி விட்டது.

பக் 23

## காணாமற்போனோரை கண்டறியும் வரை எமது போராட்டம் நாடெங்கும் தொடரும்

### யாழ்ப்பாணத்தில் அஜித் குமார எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ.18

காணாமற்போனோரை தேடிக் கண்டறியும் வரை எமது போராட்டம் நாடளாவிய ரீதியில் தொடரும். காணாமற்போனோர் தொடர்பாக அரசு உரிய பதிலை வழங்கும் வரை மக்கள் போராட்ட இயக்கம் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்துக்கொண்டே இருக்கும். இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார.

யாழ்ப்பாணத்தில் நேற்று மக்கள் போராட்ட இயக்கம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அஜித் குமார அதன்பின்னர் உதயனுக்குக் கருத்து வெளி யிடும் போதே மேற்கண்டவாறு

பக் 23

## ஆணைக்குழுவின் அறிக்கையை தீவிரமாக ஆராய்கின்றது ஐ.நா.

### பொதுச் செயலர் பான் கீ மூன் கூறுகிறார்

நியூயோர்க், டிசெ.18

இலங்கை அரசினால் வெளியிடப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அறிக்கை வெளியிடப்பட்டதை வரவேற்பதாகவும் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை

பக் 23

## கடத்தப்பட்டோரை விடுவிக்குமாறு யாழ்.நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட தமது உறுப்பினரை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற-ஜனஅறகல வியாபாரய கட்சி நேற்று யாழ்.நகரில்- முன் அறிவிப்பற்ற-திடீர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

யாழ்.பஸ் நிலையம் முன்பாக நண்பகல் 12.30 மணியளவில் திரண்ட சில நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையொட்டி யாழ்ப்பாணம் முழு வதும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டக்

பக் 23

## அறிவிக்கப்படாத மாகாண சபைத் தேர்தல் பற்றி ஏன் அவசரம்? பின்னர் ஆலோசிக்கலாம் தானே!

### தருணம் வரும்போது சிவில் சமூகத்துடன் பேசலாம் என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம்,டிசெ.18

வடக்கு மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் அதனைப்பற்றி, அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தமிழ் சிவில் சமூகத்தினர் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் நேரடியாகக் கலந்துரையாட முடியும்.

அறிவிக்கப்படாத ஒரு தேர்தல் தொடர்பில் இப்போதே தீர்மானம் மேற்கொள்வது உசிதமானதாக இருக்காது-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அடுத்த வருடம் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று இதுவரை எவரும் தெரிவிக்கவில்லை. ஜனாதிபதி கூட அடுத்த வருடம் நாட்டில் எந்தவித தேர்தலும் இடம்பெறாது என்று தெரிவித்துள்ளார்.

பக் 04

## முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு

### 240 தெற்குக் குடும்பங்கள் குடியமர்வு

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் தொடர்ந்தும் தெற்கில் இருந்து வந்தவர்களால் அபகரிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் 240 இற்கும் மேற்பட்ட தெற்குக் குடும்பங்கள் குடியேறியுள்ளதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

முல்லைத்தீவு முகத்துவாரம் பகுதியில் உள்ள காணிகள் அனைத்தும் பூர்வீகமாகத் தமிழர்கள் வாழ்ந்த காணிகள் என அந்த மக்கள் கூறுகின்றனர். அதற்கு அரசினால் வழங்கப்பட்ட சட்ட ஆவணங்களும் தம்மிடம் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி

பக் 23

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog · Sri Lanka Telecom · airtel · etisalat · Sri Lanka Telecom Mobitel · (CEB) · WESTERN UNION MONEY TRANSFER · HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள

சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம் மானிப்பாய் நெல்லியடி சாவகச்சேரி கிளிநொச்சி சங்கானை

SINGER EXPRESS PAY

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்
செய்தி : 021-5678844
விளம்பரம் : 021-5679731
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானிலை மேக மூட்டத்துடனும் இடி மின்னல் நிலவுவதற்கான சாத்தியமுள்ளது.

## சாவகச்சேரி சந்தைக்கு முன் வாகனம் நிறுத்தத் தடை

தென்மராட்சி, டிசெ.18

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக சைக்கிள் உள்ளிட்ட வாகனங்கள் நிறுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென நகரசபையின் மாதாந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

வாகனப் போக்குவரத்துக்கள் அதிகரித்து வரும் இக்கால கட்டத்தில் சைக்கிள்கள் உட்பட பல்வேறு வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெருக்கடிஏற்படுவதாக சுட்டிக்காட்டி ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சகல ரக வாகனங்களும் இந்தப் பகுதியில் நிறுத்துவது தடை செய்யப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-207)

# வடக்கு ஆளுநர் மூக்கை நுழைக்காத இடமேயில்லை

புடலங்காயும் பூசணிக்காயும் இன்று எதிர்க்கட்சியினரின் ஆயுதமாக மாறிவிட்டன. தலைவர் ஒருவர் இல்லாமலே ஆட்சியைப்பிடித்து விடலாம் எனக் கனவு காண்கின்றனர். இவ்வாறு நையாண்டி செய்தார் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத்.

நாடாளுமன்றில் நேற்று வர்த்தக மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் இப்படிக் கூறினார்.

பிரதி அமைச்சர் பஷீர் எப்போதுமே மற்றவர்களின் மனம் நோகாமல் மிகவும் அமைதியாகப் பேசுபவர். ஆயினும் மனதுக்குப்பட்டவற்றை அப்படியே கூறிவிடக்கூடியவர்.

நேற்று முன்தினம் கூட காணி விவாதம் தொடர்பாக விவாதிக்கும் போது வடக்கு,கிழக்கில் ஆயுதப் போராட்டம் உருவாகியதற்குக் காரணமே காணிப்பிரச்சினைதான். எனவே காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

### பூசணிக்காய், வெடிகுண்டு புடலங்காய் துப்பாக்கி

ஆனால் பிரதி அமைச்சர் நேற்று சற்று காட்டமாகவே பேசினார். இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசுடன் பேசுவதற்கு எந்த விடயமும் இல்லாமல் போய்விட்டது. அதனால்தான் புடலங்காயைத் துப்பாக்கியாகவும், பூசணிக்காயை வெடிகுண்டாகவும் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

60 லட்சம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை வெறும்ஆறாயிரம் விவசாயிகளைப் பகடைக்காய்களாக்கி அழித்துவிடலாம் என்று கனவு காண்கின்றனர் என்றும் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத் விமர்சித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது.

### அடாவடித்தனங்களுக்கு ஆப்பு

நாடாளுமன்றத்தைக் காடாளு மன்றமாக்கி முஷ்டிகளை முறுக்கிக் கொண்டு சண்டித்தனம் காட்டும் உறுப்பினர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும் சபாநாயகரின் அதிரடி அறிவிப்பொன்றை பிரதி சபாநாயகர் சபையில் சமர்ப்பித்தார்.

நாடாளுமன்றத்தின் இறைமை, மரபு, ஒழுக்கம் என்பவற்றை உறுப்பினர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இவற்றை கடைப்பிடிக்கத் தவறும் உறுப்பினர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கான விதப்புரைகளைச் செய்வதற்காக சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர தலைமையில் ஒரு குழுவை சபாநாயகர் நியமித்து உள்ளார்.

### இதுவே அந்த அறிவிப்பு

சபாநாயகரின் இந்த முடிவு சண்டித்தனம் காட்டியவர்களுக்கு இடிபோல் அமைந்து விட்டது. வரவு - செலவுத்திட்டத்தை சபையில் ஜனாதிபதி சமர்ப்பித்த போது இடம்பெற்ற கசப்பான சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று பிரதி அமைச்சர் சரண குணவர்தனவை சபை அமர்வுகளில் இருந்து சபாநாயகர் ஒரு வாரம் இடைநிறுத்தி வைத்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சபாநாயகரின் இந்த நடவடிக்கை அடாவடித்தனங்களுக்கு ஆப்பு வைத்துவிடும் என்று கருதப்படுகின்றது.

### தயாசிறிக்கு இத்துப்போன கயிற்றைக் கொடுத்தது யார்?

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடம் மிருகக் காட்சிச்சாலை தொடர்பாக ஒரு கேள்வியை எழுப்பினார். ''காலம் காலமாக இருந்த தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையை 'பின்னவலவுக்கு' கொண்டு செல்லப்படவுள்ளதாகக் கூறப்பட்டு வரு




கின்றது. ஏன் இந்த நடவடிக்கை? எதற்காக கொழும்புக்கு வெளியே அதனைக்கொண்டு போகிறீர்கள்? இவ்வாறு கொண்டு செல்வதால் ஏற்படும் செலவு எவ்வளவு? என்றும் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார். இது ஒரு புதுவிடயம். எனவே எல்லோரது கண்களும் அமைச்சரின் பக்கம் திரும்பியது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சபையில் இல்லாததனால் ஆளும்கட்சி கொறடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன பதில் அளிக்க எழுந்தார்.

''அப்படியான ஒரு திட்டம் அரசிடம் இல்லை. எனவே மேலதிக கேள்விகள் அவசியமில்லை'' என்று கூறி எழுந்த வேகத்திலேயே அமர்ந்துவிட்டார் அவர்.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார் ஏ.எச்.எம் அஸ்வர், "கௌரவ உறுப்பினர்களே! உங்களுக்கு இத்துப்போன கயிற்றைக் கொடுத்தது யார்?'' என்றார். "எனக்கு எவரும் கயிறு கொடுக்க முடியாது, உண்மையைத் தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன்'' என்று முடித்தார் தயாசிறி.

### பரீட்சை நடத்தும் போதே தெரியும் தானே?

ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க கல்வி அமைச்சரிடம் விளக்கம் கோரி கவனஈர்ப்பு பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்தார்.

''ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிந்து நான்கு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் பெறுபேறுகள் இன்னும் வெளிவரவில்லை. இது ஏன்?'' என்றார் அனுரகுமார.

'பழைய புதிய பாடத்திட்டங்களின் படி பரீட்சை நடத்தப்பட்டதால் 'இஸட்' புள்ளி வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதுதான் தாமதம்'' என்றார் அமைச்சர்.

''ஐயா! இரண்டு விதமான பரீட்சைகளை நடத்தப் போகிறோம் என்பது பரீட்சைக்கான வினாத்தாள்களைத் தயாரிக்கும் போதே உங்களுக்குத் தெரியும் தானே. 'இஸட்' புள்ளி தொடர்பாக அப்போதே ஏதாவது ஒரு தீர்மானம் எடுத்திருக்கலாம் தானே?

கடைசி நேரத்தில் ஏன் மாணவர்களை இப்படிச் சங்கடப்படுத்துகிறீர்கள் என மடக்கினார் அனுரகுமார. இந்தக் கேள்விக்கு நேரடியாக பதில் அளித்த அமைச்சர் ''உங்களைப் போல் ஊடகங்களுக்கும் மகாராஜா நிறுவனத்துக்கும் ஏற்றபடி எம்மால் பேச முடியாது'' என்றர் - கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன.

### அமைச்சருக்கே புரியவில்லையாம்

அப்போதும் விடவில்லை அனுரகுமார ''பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுதான் பெறுபேறுகளை அனுப்புவதைப் பிற்போடும்படி ஆலோசனை கூறியதாமே?'' என்றார்.

'இசற்' புள்ளி தொடர்பாக எட்டுவரி கொண்ட சூத்திரம் ஒன்றை மானியங்கள் ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ளது. ஆனால் அது என்னவென்று எமக்கே புரியவில்லை'' என்று உண்மையை ஒப்புக்கொண்டார் அமைச்சர்.

### கையில் தண்ணீர் போத்தல் இருக்கின்றது

பெற்றோலியவள கைத்தொழில் அமைச்சிடம் முத்து ரஜவெல ஆழ் கடலில் எண்ணெய்க் குழாய்களைப் பொருத்தும் நடவடிக்கை தொடர்பாக கேள்வி எழுப்பினார் அனுர குமார. இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன ஆயத்தமானார்.

''ஆகா வந்து விட்டீர்களா - பார்க்க ஆசையாக இருக்கின்றது?'' கையில் தண்ணீர் போத்தல் ஏதும் இருக்கிறதா என்றார் அனுர குமார.

ஒரு வார காலத் தடைக்குப் பின் சபைக்கு வந்த அமைச்சரை இந்தத் 'தாக்குதல்' தடுமாறச் செய்துவிட்டது.அப்போதும் விடவில்லை அனுர குமார.

''தரம் குறைந்த பெற்றோலை தேவை இறக்குமதி செய்தீர்களே பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகளை வழங்கிவிட்டீர்களா?

அதேவேளை தரம்குறைந்த அந்தப் பெற்றோலை விற்பனை செய்ய இன்னமும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதாமே? என்று கேள்விகளை அடுக்கினார் அனுர குமார.

பிரதி அமைச்சர் சரண விடாக்கண்டனுக்கு கொடாக்கண்டன். ''90 வீதமானவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சி உள்ள 2600 மெட்ரிக் தொன் பெற்றோலை விற்க கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிறுவனம் ஒன்று மிகவும் குறைந்த விலையில் வாங்க முன்வந்தது. அதனால் அந்த நிறுவனக் கோரிக்கையை நிராகரித்து விட்டோம் - என்றார் பிரதி அமைச்சர்.

### எங்கே உங்கள் ஜனநாயகம்?

விவாதத்தில் உரையாற்றிய கூட்டமைப்பு உறுப்பினர் சிறிதரன், 'கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகளைச் சபையில் அம்பலப்படுத்தினார்.

''வடமாகாண ஆளுநர் மூக்கை நுழைக்காத இடமே இல்லை. கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களை நியமிப்பது கூட ஆளுநரும் இராணுவமும் தான்'' என்று சாடினார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

### ஆட்சேபித்தார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்

இதனை ஆட்சேபித்தார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் '' வடமாகாண ஆளுநர் அப்பகுதி மக்களுக்கு அளப்பரிய சேவைகளைச் செய்து வருகிறார் . அவர் இந்தச் சபையில் இல்லை. சபையில் பதில் அளிக்க முடியாத ஒருவரைப்பற்றி இங்கு பேசக்கூடாது'' என ஆட்சேபித்தார் அமைச்சர்.

''சபாநாயகர் அவர்களே நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். அங்கே நடக்கும் அட்டகாசங்களை இங்கே சொல்லாமல் வேறெங்கே சொல்ல முடியும் என்று சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தார் சிறிதரன்.

### கூட்டமைப்பை திட்டித் தீர்த்தார் அமைச்சர் டக்ளஸ்

தனது அமைச்சைப் பற்றி பேச வேண்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சின் நடவடிக்கைகளைப் பற்றி பேசிய நேரத்தைவிட கூட்டமைப்பு உறுப்பினர்களையும் திட்டித் தீர்த்ததே அதிகம். கூட்டமைப்பு உறுப்பினர்களும் இடையிடையே கேள்விகளைக் கேட்டுக் குழப்பினர். அப்போது அமைச்சர் ரிஷாத், டக்ளஸின் பக்கம் வந்து அமர்ந்தார். அப்போது ரிஷாத்தின் முதுகில் தட்டிய அமைச்சர் டக்ளஸ், வாய்ச்சவடால் காட்டுபவர்களை அவதானித்துக் கொள்ளுங்கள் - என்றார்.

வர்த்தகமும் கூட்டுறவும் எப்படி மந்தமாக இருக்கின்றதோ அதே போன்றே விவாதமும் மந்தமாக நடந்து முடிந்தது.

## நிகழ்வுகள் இன்று

**கலைவிழா**

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த கலைவிழா காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது. நிலையத்தின் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராசா கலந்து கொள்வார். (ம-313-207)

**ஒளிவிழா**

இளவாலை புனித யூதாதேயு ஆலயத்தின் வருடாந்த ஒளி விழா மாலை 6 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. இ.யூட்கமிலஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் உப அதிபர் ரி.எ. றெஜிக்குமார் கலந்து கொள்வார். (ம-51-313)

**நிறைவுநாள் நிகழ்வு**

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட தேசிய மொழிக்கற்கை மொழித்திட்டத்தில் சிங்களப் பாடகற்கை நெறியை சாவகச்சேரி நிலையத்தில் பெற்றுக் கொண்டவர்களுக்கான ஒன்று கூடலும் நிறைவு நாள் நிகழ்வும் முற்பகல் 11மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (ம-207-313)

**நூல் வெளியீடு**

சிவஸ்ரீ சி.சிதம்பரக்குருக்கள் ஆக்கிய ''திருமணப் பொருத்தம்'' எனும் நூல் வெளியீட்டு விழா காலை 9.30 மணிக்கு கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் இ.கைலாயப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்துவார். (ம-207-38)

**நினைவஞ்சலிக் கூட்டம்**

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆ.சி. நடராசாவின் நினைவஞ்சலிக் கூட்டம் காலை 9 மணிக்கு குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**ஒன்று கூடல்**

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையின் வருடாந்த ஒன்று கூடல் முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலையில் இடம் பெறவுள்ளது. வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (ம-51-313)

**கலந்துரையாடல்**

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 7 பாடசாலைகளின் அதிபர்கள், ஊட்டல் பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**பொதுக்கூட்டம்**

யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும். (ம-313)

# தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை கொச்சைப்படுத்துகிறார் அமைச்சர் டக்ளஸ்

## சரவணபவன் எம்.பி. அறிக்கை



கொழும்பு, டிசெ.18

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையே இடம்பெற்றுவரும் பேச்சுக்கள் தொடர்பாகவும் கடந்த திங்களன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடத்திய பத்திரிகையாளர்கள் சந்திப்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் அலட்சியப்படுத்தி விடக்கூடியவை அல்ல. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கைகளைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் அம்முயற்சிகளை குழப்பும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் டக்ளஸ். அதன் தொடர்ச்சியாக இப்போதும் தமிழ் மக்களின் நலன்களைப் பேணுதல் என்ற போர்வையின் கீழ் நின்று அரசின் அடக்கு முறை நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையிலும் தமிழ்த் தேசியக்ககூட்டமைப்பின் முயற்சிகளை மலினப்படுத்தும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தமிழ்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு ஒரு ஒத்தகருத்தின் அடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்வைக்க வேண்டும் என்ற அவரின் கருத்து கேட்பதற்கு அழகானது என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே அரசுக்கு ஆதரவு கொடுத்த சில தமிழ்க் கட்சிகள் உட்பட பல தமிழ்க் கட்சிகள் தற்சமயம் தமிழ்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்துள்ளன என்பது ஒருபுறமிருக்க, எந்த அடிப்படையில் தமிழ் கட்சிகள் ஐக்கியப்படவேண்டும் என்பதை அவர் குறிப்பிட வேண்டும். அவர் அடிக்கடி சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத தீர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கிறது எனக் குற்றஞ்சாட்டி வருகிறார் அப்படியானால் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கோரிக்கைகளை முன்வைப்பதற்கு தமிழ்க்கட்சிகள் ஐக்கியப்பட வேண்டுமா? - இவ்வாறு கேள்வி கேட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் யாழ்.மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குகொள்வது தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெளிவான கொள்கைகளை முன்வைத்துள்ளது. அதாவது இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசும் த.தே.கூட்டமைப்பும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தபின்பு அந்த இணக்கப்பாட்டை முன்வைத்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்வது என்பது தான் வடக்குக் கிழக்கு இணைப்பு. வடக்கு கிழக்கு இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரம் என்பன தொடர்பாக பேச்சுக்களில் ஒரு இணக்கப்பாடு எட்டப்படவில்லை. அதேவேளையில் பேச்சு தொடர்ந்து கொண்டும் இருக்கிறது. அமைச்சரவை முடிவுகள் என்ற பேரில் சில கருத்துக்கள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் வெளியிடப்பட்டன.

ஆனால் அவை இன்னும் பேச்சு மேசையில் முன்வைக்கப்படவில்லை, விவாதிக்கப்படவுமில்லை. அப்படியான ஒரு நிலையில் நாடளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துகொள்வதானால் அமைச்சரவையின் முடிவுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டு விட்டது என்று தானே அர்த்தம்? இதிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவின் கருத்து எவ்வளவு நச்சுத்தன்மை வாய்ந்ததும் நரிநோக்கம் கொண்டதும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

அதிலும் எல்லா தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட்டு ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களை விற்க வேண்டும் என விரும்புகிறார் அவர்.

கூட்டமைப்பினர் 15 சுற்றுப் பேச்சுக்களை நடத்திய போதும் அரசின் மீது நம்பிக்கை வைக்கவில்லை எனவும் நம்பிக்கை வைத்தால் பிரச்சினை தீர்ந்து விடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நம்பிக்கை என்பது கண்மூடித்தனமாக வைக்கப்பட முடியாதது. எமக்கு அரசின் மேல் நம்பிக்கை உண்டாக்குவது அரசின் நடைமுறைகளே. பேச்சுவார்த்தைகளில் ஒப்புக் கொண்ட விடயங்களையே நிறைவேற்றாத ஒரு தரப்பை எப்படிக் கண்மூடித்தனமாக நம்ப முடியும்? தொடர்ந்து அவைகளை நிறைவேற்றி வைக்க முடியும் என்ற நம்பிக்கையில் தானே த.தே.கூட்டமைப்பு தொடர்ந்து அரசுடன் பேசி வருகிறது. நம்பிக்கை என்பது வேறு; அடிவருடித்தனத்தை நம்பிக்கை எனக்கூறுவது வேறு என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றிருந்தால் இப்போது எல்லாப்பிரச்சினைகளும் தீர்ந்திருக்கும் என அமைச்சர் தெரிவித்த கருத்து எவ்வளவு உண்மைக்குப் புறம்பானது என்பதைக் கடந்த காலமே சொல்லும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று மாகாண சபையில் முதலமைச்சர் பதவி வகித்த வரதராஜப்பெருமாள் ஒரு சிற்றூழியரைக்கூட நியமிக்க அதிகாரமற்ற முதலமைச்சர் பதவி எனக் கூறி தமிழீழ பிரகடனம் செய்தது வரலாறு. இப்படியான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை வைத்து தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற்றுவிட முடியும் என்பது அப்பட்டமான ஏமாற்றல்லவா?

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம் எல்லாம் இப்போது பறிக்கப்பட்டுவிட்டனவே! இப்படிப் பறித்துப் பறித்தா தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

அமைச்சர் கனிந்து வரும் சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது என்று கூட்டமைப்புக்கு ஆலோசனை கூறியுள்ளார். எது கனிந்து வரும் சந்தர்ப்பம் என்பதைத் தான் எம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை? வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்ட, காணி, பொலிஸ் அதிகாரமற்ற ஓர் அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்வதா?

அடிப்படையில் அப்படியொரு சந்தர்ப்பம் கனிந்துவருமானால் உறுதியாகத் தடம்புரளாமல் நின்று எமது உரிமைகளை வென்றெடுப்பது தான் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்துவதாகும். மாறாக எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து அடிமையாவது அல்ல!

அப்படியிருந்த போதிலும் இலங்கை அரசு மேற்கொண்ட எத்தனையோ இழுத்தடிப்புகள், திசை திருப்பல்கள் மத்தியிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுதியான நிலைப்பாடு காரணமாக பேச்சுகள் ஒரு முக்கிய கட்டத்தை உருவாக்கியுள்ளன. இந்த நிலையில் இப்பேச்சுகள் முறிவடையும் நிலை ஏற்பட்டால் அதற்கான பழியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையில் போட முயற்சிக்கும் சதியின் ஒரு பகுதியாகவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களை நோக்க வேண்டி உள்ளது. ஆனால் தமிழ் மக்கள் எப்போதுமே இப்படியான நடவடிக்கைகளைக் கண்டு ஏமாந்தது கிடையாது என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் - என்றுள்ளது.

## பாடசாலை, பிரதேச சபை காணிகள் படையினர் வசம்

முல்லைத்தீவு,டிசெ.18

முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க பாடசாலை, பிரதேச சபையின் உப பணிமனை ஆகியவற்றின் சொந்தக் காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதி யில் உள்ள கொக்கிளாய் அ.த.க பாடசாலைக்குச் சொந்தமான நான்கு ஏக்கர் காணி மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உபபணிமனையின் இரண்டு ஏக்கர் காணி என ஆறு ஏக்கர் காணி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு அவற்றைச் சுற்றி வேலிகள் போடப்பட்டுள்ளன.

இந்தக் காணி அபகரிப்பு தொடர்பாக மக்கள் இராணுவத்தினரிடம் சென்று கேட்டபோது இராணுவத்தினர் அந்தக் காணியை வழங்க முடியாது எனக் கூறியதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இப்பகுதியின் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இவ்வாறு இரு காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளமையால் பாடசாலை, பிரதேசசபையின் உபபணிமனை ஆகியவற்றுக்கான கட்டடங்களை அமைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளதுடன் அபிவிருத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதாக கொக்கிளாய் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-6)

## பிலிப்பைன்ஸில் புயலில் சிக்கி 436 பேர் சாவு

மணிலா, டிசெ.18

பிலிப்பைன்ஸில் நேற்றுத் தாக்கிய மோசமான புயலினால் 436 பேர் உயிரிழந்தனர்; 162 பேர் காணாமற்போயுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. புயலினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் அநேகர் வெள்ளம் தாக்கியபோது உறக்கத்தில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிலிப்பைன்ஸில் பல பகுதிகளும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதால் பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

## இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் ஜனவரியில் பூர்த்தியாக வேண்டும்

### ஏற்பாடுகளை துரிதப்படுத்துமாறு அரச அதிபர் தெரிவிப்பு

இந்திய அரசினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னோடி வீடமைப்புத் திட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் திறந்து வைப்பதற்குரிய வகையில் உடனடியாக சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பணித்துள்ளார்.

இந்திய அரசின் வீட்டுத் திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற போதே மேற்படி பணிப்புரை விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இந்திய அரசின் நிதியுதவியில் யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக 150 வீடுகள் அமைக்கும் பணிகள் கடந்த வருடம் நவம்பர் 27 ஆம்திகதி ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் இது வரையில் மிகக்குறைந்த எண்ணிக்கையான வீடுகளே கட்டப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்படாமை குறித்தும் அதற்கான காரணங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. ஜனாதிபதி விசேட செயலணியின் பணிப்புரைக்கமைய எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஒரு தொகுதி வீடுகளாவது மக்களிடம் கையளிக்கப்படவேண்டும். வீடுகளுக்குரிய மின்சாரம், குடிதண்ணீர், வீதிப்போக்குவரத்து உட்பட அனைத்துத்துறை சம்பந்தப்பட்ட வேலைகளும் முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதற்கு ஏற்ற வகையில், உடனடியாக அந்தந்த திணைக்களங்கள் வேலைகளை மேற்கொண்டு ஜனவரி முடிவுக்குள் தமது பணிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். என்று பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15)

### யாழ். நகர் கடைகள், கடற்கரைகளில் தேடுதல்

## தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டு தீயிட்டு அழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் வலைகளை கைப்பற்றி அழிப்பதற்கான திடீர் தேடுதல் வேட்டை நேற்றுமுன்தினம் யாழ். நகரப் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் கடற்கரையோரங்களில் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையிலான திணைக்கள உத்தியோகத்தர்களே இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்தக் குழுவினர் யாழ். நகரிலுள்ள ஐந்து கடற்றொழில் உபகரண விற்பனை நிலையங்களில் தேடுதல் நடத்தினர். அப்போது இரு விற்பனை நிலையங்களிலிருந்து ஒரு தொகுதி தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேசமயம் காக்கைதீவுக் கடல் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட தேடுதலின்போது சுமார் 50 கிலோ எடையுள்ள தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டன. அவை பின்னர் அந்தப் பகுதியில் வைத்தே அவை தீமூட்டி அழிக்கப்பட்டன. (ஒ-14)

நேரடியாக கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பொருட்களை
யாழ் விலையில் சாவகச்சேரி நகரில் பெற்றுக்கொள்ள....
இல. 03, தனங்கிளப்பு வீதி(நவீனசந்தை அருகாமை), சாவகச்சேரியில்
பொதிகை
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்
புத்தகசாலை & போன்சொப்
அப்பியாசக்கொப்பிகள், பேனை,பென்சில், பாடப்புத்தகங்கள் விசேட கழிவு விலையில்
பொலித்தீன் வகைகள், 2012 கலண்டர்கள், டயரிகள், நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
பென்சில் பேஸ், பென்சில் பெட்டி, சேவுயர் பேப்பர் கப், வெடிங் பாக், ஸ்ரோ, பிறவுண் பாக், சொப்பிங் பாக் மற்றும் பல... மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்
கலண்டர், டயறி பிறிண்டிங் ஓடர்களும் செய்து கொடுக்கப்படும்
T.P :0212270447
FAX :0212270447
email : phothigai@gmail.com

## மகாஜனாவின் மைந்தனுக்கு மாதாவின் அஞ்சலிகள்...



### தம்பு நாகேந்திரம் போஜன்

(உதவி பிரதம சாரண ஆணையாளர்)

எமது கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவனாகவும் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளராகவும் எமது சாரணர் குழுவின் ராணிச்சாரணராகவும் காங்கேசன்துறை முன்னாள் சாரண ஆணையாளராகவும் வட மாகாண முன்னாள் சாரண ஆணையாளராகவும் தற்போது உதவி பிரதம சாரண ஆணையாளராகவும் இருந்து எமது கல்லூரிக்கு புகழ் சேர்த்த த.நா.போஜன் அவர்களுக்கு பாடசாலை சமூகத்தின் அஞ்சலிகளை காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் உறவுகள் அமைதி பெறவும் எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (ச/6953)



## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

வெற்றிடங்கள்: கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

தகைமைகள்: க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

a) இளைப்பாறிய பொலிஸ் /படை உத்தியோகத்தர்கள், சாரணர், சென்ஜோன்ஸ், அம்புலன்ஸ் அங்கத்தவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

b) தடகள, கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், கராட்டி, கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும்சிறந்த வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு: மேற்கூறப்பட்ட தகைமையில் a+b உள்ளவர்களுக்கு கல்வித் தகைமையில் விலகல் அளிக்கப்படும்.

நல்ல தேக ஆரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

I) உயரம் 5' 4"

II) 20 வயதிற்கு மேற்பட்டோர் (சம்பளம் மாதமொன்றுக்கு EPF & ETF மற்றும் வருகை ஊக்குவிப்பு பணம் உட்பட ரூபா 14,000)

நேர்முகப்பரீட்சை 337, 1/1, கஸ்தூரியார் வீதியிலுள்ள பணிமனையில் 21.12.2011-22.12.2011-23.12.2011 புதன் -வியாழன் மற்றும் வெள்ளி நாட்களில் மு.ப. 10 மணி -16 மணிவரை நடைபெறும்.

கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

1. கிராமசேவகரின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
2. வதிவிடச் சான்றிதழ்
3. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
4. கல்வித்தராதரப்பத்திரங்கள்
5. தேசிய அடையாள அட்டை
6 குடும்ப அட்டை

இவை அனைத்தினது உண்மைப்பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வரவும்.

337 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். பணிப்பாளர்.



## ஆசிரியர்கள் தேவை!

விரிவாக்கப்படவுள்ள எமது நிறுவனத்தின் பல கிளைகளுக்கு பின்வரும் பிரதேசங்களில் **"சிறுவர்களுக்கான ஆங்கிலம்"** கற்பிக்க ஆசிரியர்கள் தேவை.
(மானிப்பாய், சுன்னாகம், உடுவில், கொக்குவில், கல்வியங்காடு, நல்லூர், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, குறுநகர், சங்கானை.)

அடிப்படைத்தகமை: O/L ஆங்கிலத்தில் திறமைச்சித்தி

விண்ணப்பங்களை 7 நாட்களுக்குள் எமது நிறுவனத்திற்கு நேரிலோ, தபாலிலோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பிவைக்கவும்.

spectra skills 0212221422 0212221423 19,Stanley road, Jaffna. jaffna@spectraskills.com



## Spoken English

### புதுவருடத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்!

3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசலாம்

மிக பின்தங்கியவர்கள் மற்றும் ஓரளவு தகமையுள்ளோர் ஆகியோருக்கான இருவேறு பிரிவுகள்

உங்கள் வசதிப்படி வார மற்றும் வார இறுதி வகுப்புகள்

ஆங்கிலத்தின் 4 அலகுகளான Reading, Writing, Listening & Speaking அனைத்துக்குமான பயிற்சிகள் Audio,Video visuals மூலம் வழங்கப்படுகிறது.

IELTS, KET, BUSINESS ENGLISH, PROFESSIONAL ENGLISH ஆகிய கற்கை நெறிகளும் எம்மிடமுள்ளன.

புதுவருட வாழ்த்துகள்! 31.12.2011 அன்று காலை 10 மணிக்கு இலவச வகுப்பும் சான்றிதழும் அனுமதிக்கு முந்துங்கள்!

spectra skills 0212221422 0212221423 19,Stanley road, Jaffna. jaffna@spectraskills.com


## சாரண ஆணையாளரின் இறுதிக்கிரியைகள் இன்று

நேற்று முன்தினம் காலமான உதவிப் பிரதம சாரணஆணையாளர் ரி.என். போஜனின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வடமாகாணத்திலுள்ள சாரணர்கள், சாரண ஆசிரியர்கள் அனைவரையும் பூரண சீருடையில் காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்றலில் கூடுமாறு யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் அறிவித்துள்ளது. (ஓ-15)

## ஆலயத் தேர்முட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக சபை உறுப்பினரான நாகராஜா தியாகராஜன் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர் ஆவார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் திகதி யாழ்.அளவெட்டி மீனாட்சி அம்மன் ஆலயத்தேர் முட்டிக்குள் ஆயுதங்களும் இராணுவச் சீருடைகளும் மீட்கப்பட்டன. இதையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆலய நிர்வாக சபை உறுப்பினரான நாகராஜா தியாகராஜன் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப் பட்டிருந்தார்.

இவர் மீது குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வந்தது.

குறித்த நபருக்கு எதிராக இரு இராணுவத்தினரும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் சாட்சியமளித்தனர்.

எனினும் குறுக்கு விசாரணையின்போது இந்த மூன்று சாட்சிகளுக்கும் இடையில் பல முரண்பாடுகள் காணப்பட்டன.

இதனை அடுத்து சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாத நிலையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். பரமராஜா, அவரை இந்த வழக்கில் இருந்து பூரணமாக விடுவித்து விடுதலை செய்யுமாறு தீர்ப்பளித்தார். (ந-சி)

## அறிவிக்கப்படாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறானதொரு நிலையில் வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தீர்மானிப்பது பொருத்தமானதாக இருக்காது. மேலும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தமிழ் சிவில் சமூகத்தினர் நேரடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும்.

இதேவேளை மாகாண சபையில் போதிய அதிகாரங்கள் இருக்கும் என்று நான் கூறமாட்டேன். இருப்பினும் மாகாண சபையைக் கைப்பற்றுவதன் ஊடாக வடக்கில் ஆளுநர் எதேச்சதிகாரமாக செயற்படுவதையும், முறையற்ற அரசியல் தலையீடுகளையும் தடுக்க முடியும். எமது நிலங்களை ஓரளவேனும் பாதுகாத்துக் கொள்ள முடியும்-என்றார். (ஓ-15)


## தேவை

மிக்விக் கம்பனி ஒன்றுக்கு மிக்விக் உற்பத்தியில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. உற்பத்தி உதவியாளரும் தேவை.

தொடர்பு: 0771368968 0213206870 (11743) (10)

## விற்பனைக்கு

பம்பாய் வெங்காய நடுகைக் குமிழ் (Bulb) விற்பனைக்குண்டு.

தொடர்பு: செ.விசுவநாதன், ஆஸ்பத்திரி சந்தி, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில by: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி. வகுப்புகள் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை. தொடர்பு: 0776751649

## பணியாளர்கள் தேவை

- படப்பிடிப்பாளர்
- கணக்குப்பதிவாளர்
- டிசைனர் (PhotoShop)
- சிற்றூழியர்
- உதவியாளர்கள்
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப், 62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்கள்

### எஸ். மகாலிங்கம்

(ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர்- இலங்கை வங்கி)



கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகாலிங்கம் நேற்று (17.12.2011) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பிரதம லிகிதர்- பொலிஸ் திணைக்களம், கொழும்பு)-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் பாக்கியத்தின் (சரசு) பாசமிகு கணவரும் திருமதி ரஜனி ராசலிங்கம் (இந்தியா), திருமதி பவானி விமலேஸ்வரன் (கனடா), விமலேந்திரா மகாலிங்கம் (லண்டன்), நிர்மலேந்திரா மகாலிங்கம் (லண்டன்), திருமதி. மாலினி நித்தியானந்தன் (கனடா) ஆகியோரது பாசமிகு தந்தையும், திருமதி பத்மநிதி விமல்ராஜா (கொழும்பு)வின் அன்புச் சகோதரனும், வி.விமல்ராஜா (ஓய்வு பெற்ற தொழில் நீதிமன்ற நீதிபதி - கொழும்பு), வி.கணேசராஜா (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), வி. விஸ்வேஸ்வரராஜா (நியூசிலாந்து), வி.நிமல்ராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்: ம.பாக்கியம் சரசு-(மனைவி)
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

### இ. இரவீந்திரன்



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது நோர்வேயை வசிப்பிடமாகக் கொண்ட இ.இரவீந்திரன் 13.12.2011 அன்று அகால மரணமானார்.

அன்னார் திரு. திருமதி இராசதுரை கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற தெய்வேந்திரம் திருமதி அன்னம் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் அன்புக் கணவரும் சோபன், சரன் ஆகியோரது பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராஜசேகரன், மஞ்சுளாதேவி, பிரதீபன், தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மராசன், தர்மராணி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.12.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு நோர்வேயில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ.குமரகுருபரர்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

### வேலுப்பிள்ளை அருணகிரிநாதன்



காரைநகர், சடையாளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அருணகிரிநாதன் (16.12.2011) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சின்னாச்சிப் பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகநாதனின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவசுப்பிரமணியம், சிவபாக்கியம், சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செந்தூர்நாதனின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற புனிதவதி, பரமேஸ்வரன் மற்றும் கலைமகள் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம், காசிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, தங்கம்மா ஆகியோரின் மைத்துனரும், ரோகினி, நாராயணன், சிவசொரூபி, தார்மீகன், சிவதர்சினி, சிவகணேசன், பாலகணேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், கம்சிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
சடையாளி, காரைநகர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக...

★ இனப்பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு உருவாக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு வழிமுறை ஊடாக நாட்டில் வாழும் மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உண்டாக்க முடியும்.

★ எல்லோரும் ஒற்றுமையுடனும் ஒரே அடையாளத்துவத்தை அடிப்படையாகக் கொள்வதைப் பிரதான நோக்கமாகவும் கொண்டு விளங்கவும் அதேவேளையில், நாட்டில் வாழும் சகல இன மக்களும் சகல மட்டங்களிலும் அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருப்பதற்கும் வகை செய்யப்பட வேண்டும்.

★ அதிகாரப் பகிர்வில் பாரபட்சம் இருக்கக்கூடாது; பாரபட்சம் நிலவுவதாகத் தோன்றவும் கூடாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ள சிபார்சுகள் பலவற்றில் மேற்கண்டவையும் அடங்குகின்றன.

★ நாட்டின் இப்போதைய அரசியல் கலாசாரம் மக்களை அதிகாரமற்றவர்களாகவும், உதவியற்றவர்களாகவும் மாற்றிவிட்டது. அதனால் அவர்களுக்கு உரித்தான சேவைகளையும் வசதிகளையும் பெறுவதற்கு முழுக்க முழுக்க அரசியல்வாதிகளின் தயவில் தங்கி இருக்க வேண்டியுள்ளது.

★ ஆகையால், அரசாங்க அதிகாரிகளாலும் ஏனையோராலும் தமக்குரிய உரிமைகளை இழக்கும், தமக்குள்ள குறைகளைத் தீர்க்க முடியாதிருக்கும் சகல பிரசைகளுக்கும் குறிப்பாக சிறுபான்மை மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென சுதந்திரமாக இயங்கக் கூடிய ஒரு நிறுவனம் - அமைப்பு - உருவாக்கப்பட வேண்டும்.

● இறுதிக்கட்டப் போரின்போது குற்றம் இழைக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால், அந்தச் சம்பவங்கள் குறித்த உண்மைத் தன்மையைத் திரட்டுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

● சட்டத்தை மீறிய சம்பவங்கள் சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் அவை குறித்து நன்கு விசாரித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

● தவறிழைக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டமா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ ஆயுதப் படைகளுடன் தொடர்புபட்ட அலகுகளுடன் பொலிஸ் திணைக்களம் கொண்டுள்ள உறவுநிலை துண்டிக்கப்பட வேண்டும். ஆயுதப் படைகள் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவை. ஆனால் பொலிஸ் திணைக்களம் மக்களின் (சிவிலியன்) நிறுவகமாகும். அது சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதை கடமையாகக் கொண்டிருக்க வேண்டும்.

★ பொலிஸ் திணைக்களம் மீது மக்கள் நம்பிக்கை வைக்குமளவுக்கு, அதனை வழிப்படுத்துவதற்கு, கண்காணிப்பதற்கு, நிரந்தரமான, சுயேச்சையான பொலிஸ் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். பொலிஸ் திணைக்கள அதிகாரிகளைச் சுயேச்சையாக விசாரிக்கும் அதிகாரம் அதற்கு வழங்கப்பட வேண்டும்.

★ மாகாணங்களில் பணியாற்றும் பொலிஸாருக்கு போதிய அளவு - தேவையான - சட்ட அறிவு இல்லை. ஆகையால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கிளைகள் அங்கு அமைக்கப்படவேண்டும்.

● இறுதிப்போரில் பொது மக்களின் உயிர்கள் கணிசமான அளவில் இழக்கப்பட்டன என்பதனை அறிக்கை ஒப்புக்கொண்டுள்ளது.

எனினும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தவிர்ப்பதற்கான கொள்கையை வகுத்து அதன் பிரகாரம் அரசும் அரச படையினரும் செயற்பட்டனர்.

★ அரச படைகள் நல்ல முன்னுதாரண அடிப்படையில் செயற்பட்டபோதிலும், பெரும் எண்ணிக்கையில் காணாமற்போதல், கடத்தல், சட்ட விரோதமான தடுத்து வைப்புகள் இடம்பெற்றுள்ள.

★ இவை குறித்து விசாரிக்க காணாமற்போனவர்களுக்கான ஒரு சிறப்பு ஆணைக்குழு அமைக்கப்பட்டு சூத்திரதாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

★ வடக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவம் தலையீடு செய்கிறதென்ற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அது இல்லாது செய்யப்பட வேண்டும்.

★ மக்களை மையமாகக் கொண்ட அதிகாரப் பகிர்வு முறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய மாகாண சபைகள் முறை திருத்தப்பட்டு மத்தியில் உள்ள அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

★ அதிகாரங்கள் பகிரப்படுவதில், வெளியுலகுக்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் முன்னேற்றம் காணப்பட வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஏற்கனவே ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினமே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய அரசியல் உரிமைகள் குறித்து அதில் திட்டவட்டமாகவோ காத்திரமாகவோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தாமரை இலையில் தண்ணீர் போன்று எல்லாம் வெறும் குமிழிகளாகவே அனுங்குகின்றன.

துலக்கமான, தூரதிருஷ்டியுடனான அம்சங்களைக் காணமுடியவில்லை. மொத்தத்தில் நாட்டில் வாழும் இனங்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு வகை செய்யக்கூடிய ஓர் அரசியல் வடிவத்திலோ மாதிரியோ, வகை செய்யப்படவில்லை.

இறுதிப்போரின் போதான குற்றச்சாட்டுக்களுக்கு, அரசின் நடவடிக்கைகளை சரியானவை என்று நிறுவ முயலும் நியாயப்படுத்தும் அம்சங்களே அறிக்கையின் முழிப்பான அங்கங்களாகி உள்ளன.

சில சர்ச்சைக்குரிய விடயங்களில் இருந்து வழுவி நழுவும் போக்கு அறிக்கையில் தென்படுகிறது. மீண்டும் விசாரணை தேவை என்ற காலம் கடத்தும் போக்கும் காணப்படுகிறது.

போர்க் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கும் வகையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமையும், அதனூடு நல்லிணக்கத்துக்கு வழி செய்யப்படும் என்று வெளிநாடுகளுக்குக் காண்பிக்கப்பட்டு வந்த காட்சி கருகிப்போய்விடும் மட்டத்துக்கே, தரவுகள் தறுக்கணித்துக் காணப்படுகின்றன.

மொத்தத்தில், ஒரு வகையில் மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாகவே கொள்ள வைக்கிறது!

# யாழ். வலய ஆசிரியர் இடமாற்ற சபையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் இல்லை

## ஆசிரியர்கள், அதிபர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.கல்வி வலய ஆசிரியர் இடமாற்ற சபையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உள்வாங்கப்படாமை தொடர்பாக ஆசிரியர், அதிபர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுவிடம் இந்த விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ். கல்வி வலய ஆசிரியர் இடமாற்ற சபையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என இதில் ஆசிரியர்கள், அதிபர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகள் மற்றும் அதிபர், ஆசிரியர்களது நிலைமைகளை அதிகம் அறிபவர்களாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களே உள்ளனர். இடமாற்றங்கள் வழங்குகின்றபோது அதிபர்கள், ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் தெரிந்து வைத்திருப்பவர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களே. எனவே ஆசிரியர் இடமாற்ற சபைகளில் அவர்கள் உள்வாங்கப்பட வேண்டும்.

யாழ். கல்வி வலயத்துக்குள் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்கள் உள்ளடங்குகின்றன. இந்தக் கோட்டங்களுக்குரிய கல்விப் பணிப்பாளர்கள் யாழ்.கல்வி வலய ஆசிரியர் இடமாற்ற சபையில் உள்வாங்கப்படவில்லை.

ஆசிரியர் இடமாற்ற சபைகளில் அந்தந்தக் கல்வி வலயங்களுக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தலைவர்களாக இருப்பார்கள். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டிருப்பார்கள்.

இதே.போன்ற கட்டமைப்பு யாழ். கல்வி வலய ஆசிரியர் இடமாற்ற சபையிலும் பேணப்பட வேண்டும் என்பதே ஆசிரியர்கள், அதிபர்களின் எதிர்பார்ப்பாகும்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர் இடமாற்ற சபையில் உள்வாங்கப்படாத விடயம் தொடர்பாக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

ஆசிரியர் இடமாற்ற சபையில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்ற சபையில் நிச்சயமாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உள்வாங்கப்படுவார்கள்- என்றார் வலயக் கல்விப் பணிப்பாளர். (த-14)

# காங்கேசன்துறை எரிபொருள் குதத்தை இம் மாதத்துக்குள் அகற்றுமாறு அறிவிப்பு

கொழும்பு, டிசெ.18

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள எரிபொருள் குதத் தொடரை இம்மாத முடிவுக்குள் அவ்விடத்திலிருந்து அகற்றிக் கொள்ளுமாறு சிமெந்துத் தொழிற்சாலை நிர்வாகம் இலங்கை பெற்றோலியக் குத அமைப்பு நிறுவனத்துக்கு அறிவித்துள்ளது.

வட பகுதிக்கு எரிபொருளை விநியோகிக்கும் முக்கிய எரிபொருள் குதத் தொடர் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற் சாலை வளாகத்திலேயே அமைந்துள்ளது. அங்கிருந்து உடனடியாக அவற்றை வேறு இடத்துக்கு மாற்றுவதில் சிக்கல் நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து அவற்றை அகற்றி வேறு இடத்தில் நிறுவுவதானால் அதற்குப் பொருத்தமான இடமொன்றைத் தெரிந்தெடுக்க வேண்டியுள்ளதெனவும், அத்தகைய மாற்றத்தை மேற்கொள்ள 200 கோடி ரூபாவரை செலவிட வேண்டி நேருமெனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தகைய பெருந்தொகை நிதியை குறிப்பிட்ட நிறுவனத்தால் செலவிட இயலாதுள்ளதாகவும், தேவைப்படும் நிதியைப் பெற்றுக்கொள்ளும் மாற்று வழிகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

(த-ஞ)

# பெருந்தெருக்களின் மையத்திலிருந்து 50 அடிக்கு அப்பாலேயே கட்டடங்கள்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு, டிசெ.18

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வரும் சகல பெருந்தெருக்களினதும் நடு மத்தியிலிருந்து இரு புறமும் 50 அடிகளுக்கு அப்பாலேயே நிரந்தரக் கட்டடங்கள் அமைதல் வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

நாடு பூராகவுமுள்ள தெருக்கள் யாவும் ஏ,பி,சி என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டு அந்தந்தப் பிரிவுக்குள் வரும் தெருக்களுக்கான பக்கங்கள் வெவ்வேறு அளவுகளில் இதுவரை காலமும் நிர்ணயிக்கப்பட்டு வந்தன.

தற்போதைய சட்ட விதிகளுக்கமைய இம் மூன்று பிரிவுகளையும் ஒரே பிரிவாக அடையாளப்படுத்தி, சகல வீதிகளுக்குமான பக்கங்கள் வீதியின் நடுப்பகுதியிலிருந்து 50 அடி தூரம் அமையுமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை விளக்கம் அளித்துள்ளது. (த-ஞ)

# பொது நூலகங்களில் தொலைக்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ.18

நல்லூர் பிரதேச சபை கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் உள்ள தனது பொது நூலகங்களில் பொது மக்களின் பயன்கருதி தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்துள்ளது.

மாணவர்களும் பொது மக்களும் நூலக மற்றும் தொலைக்காட்சித் தகவல்களை அறிந்துக்கொள்ளக் கூடியதாகப் பொது நூலகங்களைக் காலை 8.30 மணிக்குத் திறந்து இரவு 7 மணி வரை பயன்படுத்தக் கூடிய வகையில் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை நூலகங்கள் காலை 8.30 மணிக்குத் திறந்து மாலை 5 மணிக்கு மூடப்பட்டு வந்தன என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

(த-7)

**நாளை**

மார்கழி 03, திங்கட்கிழமை 19.12.2011

திதி: நவமி பி.ப12.48 வரை.

நட்சத்திரம்: அத்தம் பி.ப. 5.04 வரை.

சுபநேரம்: 12.23 - 1.53 வரை, ராகு காலம்: 7.53 - 9.23 வரை

# பணத்தினைக் கொடுத்து ஏமாறாதீர்கள்

## Study in the Uk

Jan, Feb, Intake

- 3 வாரங்களில் மாணவ வீசா பெற்று தரப்படும்
- I.E.L.T.S தேவையில்லை
- சட்டரீதியாக 80 மணித்தியாலங்கள் (மாதம்) வேலை செய்யலாம்.
- அரசாங்க பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் மாணவ அனுமதிகள் பெற்றுத் தரப்படும்.
- U.K ல் இருந்துகொண்டே வீசாவை புதுப்பிக்கும் வசதி எம்மால் செய்து தரப்படும்.

## Study in the Newzealand

- அரசாங்க பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் மாணவ அனுமதிகள் பெற்றுத் தரப்படும்.

**கீழ்வரும் பாட நெறிகளிற்கு I.E.L.T.S தேவையில்லை**

- Business Management, Hospitality, English, Computing, Cookery.
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- பாடநெறியினை பூர்த்தி செய்த பின்னர் PR க்கு விண்ணப்பிக்கலாம்.

Worldwide Educational Consultants

**Worldwide Educational Consultants**
No. 527, Galle Road, Colombo - 06, Sri Lanka
Mobile: 0771 953366/0778 526 178
Tel : 0112 361 951



# நெல்லியடி SINGER Plus ன்

நத்தார் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்


நத்தார் மற்றும் மலரும் புத்தாண்டை முன்னிட்டு



குளிர்சாதனப்பெட்டிகளிற்கு விசேட விலைக்கழிவுகள், மற்றும் வட்டியில்லா கொடுப்பனவுகள்

free

24" மற்றும் 32" LCD,LED கள்



விசேட விலைக்கழிவுகள், மற்றும் வட்டியில்லா கொடுப்பனவுகள்

**இப்பண்டிகை காலத்தை முன்னிட்டு இப்போது வல்வெட்டித்துறை பேருந்து நிலையத்தில் விசேட விற்பனையை நடைபெறுகின்றது.**
**0756354832**

விசேட விலைக்கழிவுகள் மற்றும் பரிசுப்பொருட்கள்....



பண்டிகை காலத்தில் வெளிநாடுகளில் உள்ள உறவுகள் அனுப்பும் பணத்தை பாதுகாப்பான முறையில் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

மற்றும்

மின்சாரசபை பில், ஸ்ரீ லங்கா டெலிகொம் பில்,
மொபிட்டல் ரீலோட் பில், டயலொக் ரீலோட் பில்,
கட்டணங்களையும் இலகுவாக மேற்கொள்ள முடியும்.

160 வருடகால மக்கள் நம்பிக்கையைப் பெற்ற முதற்தர வர்த்தக நிறுவனம்

SINGER Plus
இல.24 பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
021-226-4937



EPSON
EXCEED YOUR VISION





# Make a lasting impression with the World's No. 1* Projector

**புதிய தொழில்நுட்பம் மற்றும் மிகக்குறைந்த விலையில் 2 வருட உத்தரவாதம்**

## Epson Multimedia Projectors

- *EB-S9/X9
- *EB-S10/X10
- *EB-W9/W10
- *EB-95/96W/905/915W/925
- *EB-450W/455WI
- *EB-1750/1760W/1770W/1775W
- *EB-1910/1915
- *EBG5600/G5650W/G5950
- +EH-DM3 (Home Theatre Projectors)
- +EH-TW3600 (Home Theatre Projectors)



3LCD PROJECTORS




உங்கள் தேவைக்கேற்ப தெரிவுசெய்து கொள்ளுங்கள்

**Epson** உடன் இணைந்து England செல்லத்தயாரா?
இன்றே ஒரு Epson Product ஐ கொள்வனவு செய்யுங்கள்.

**The Advantages Epson Projectors :**
:: Bright Images
:: Gentle on the eyes
:: Wireless Capability
:: A/V Mute Slide
:: PC-Less Presentation
:: Direct Power ON/OF
:: Auto Keystone Correction
:: WXGA Experience

Debug
**Authorized Debug Distributor**
**MARSHA SYSTEMS(PVT) LTD**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வல்வெட்டித்துறை | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 74,Kannathiddy Road Jaffna. | MMV Road, Nelliady | 10,Modern Market Valvettithurai | 74,A9 Road Ananthapuram |
| TP : 021 222 9418 | TP : 021 4923561 | TP : 021 4923404 | TP : 021 4923525 |

# ரயில் பாதைகளில் குடியிருப்பவர்களை ஜனவரி 17 இற்கு முன் வெளியேற்றுக

### அரச அதிபரிடம் ரயில்வே அதிகாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாண மாவட்டத்தில் ரயில் பாதைகள் மற்றும் ரயில் நிலையங்களில் இருப்பவர்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதிக்கு முன்பதாக வெளியேற்றித்தர வேண்டும் என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் கோரியுள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பாக ரயில்வே திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இங்கு மேலும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், யாழ். மாவட்டத்தில் உள்ள ரயில் பாதைகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும். இந்த வேலைகளை ஆரம்பிக்க ஏதுவாக ரயில் பாதைகளிலும் ரயில் நிலையங்களிலும் குடியிருப்போர் வெளியேற வேண்டும். சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலே உள்ள ரயில் பாதைகளிலேயே மக்கள் குடியமர்ந்துள்ளனர். முன்பு 300 குடும்பங்கள் வரையில் குடியிருந்த போதும், தற்போது 100 குடும்பங்கள் வரையிலேயே தங்கியுள்ளனர்.

இந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் அல்லது ஏனைய மாற்றிடங்களில் குடியமர்த்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் புனரமைப்புப் பணிகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட இந்திய நிறுவனம், தனது பணிகளை ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பிக்க உள்ளதால் அதற்கு முன்னதாக மக்களை வேறு இடங்களுக்கு மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கலந்துரையாடலின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-15)

# யாரும் வாய் திறக்கக் கூடாது

### சபையில் மிரட்டினார் மங்கள நேசன்

யாழ்ப்பாணம், டிசெ.18

''நான் பேசி முடிக்கும் வரை எவரும் கதைக்கக் கூடாது. மீறிக் கதைத்தால் இங்கு நடப்பது வேறாகத் தான் இருக்கும்.'' எனக் கடந்த புதன்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் உறுப்பினர் ம.மங்கள நேசன் காட்டமாகக் கூறினார்.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாநகர சபையின் வரவு - செலவுத்திட்ட ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டம் ஆரம்பமாகி நீண்ட நேரத்தின் பின் சபைக்கு வந்தார் ஆளும் கட்சி உறுப்பினர் மங்கள நேசன்.

வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிக்கச் சபையில் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லை. கணக்காளர் உட்பட சில முக்கிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமல் தகுதி அற்றவர்களைக் கொண்டு இந்த உத்தேச வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தேவையற்ற எதையும் கதைக்க வேண்டாம் என்று முதல்வர் கூறினார். இதனால் ஆத்திரமடைந்த மங்களநேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது உறுப்பினர் அஸ்வருக்கும் மங்கள நேசனுக்கும் இடையே கடுமையான வாக்கு வாதம் நடைபெற்றது. மங்களநேசன் தனது உரையின் போது 'நான் கட்சிக்கு விசுவாசமாக நடப்பேன். தவறுகளைச் சுட்டிக்காட்டத் தயங்கமாட்டேன்' எனவும் குறிப்பிட்டார். (த-7)

# நெடுந்தீவில் செவ்வாயன்று புதிய பஸ் தரிப்பிடம் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

நெடுந்தீவு மேற்கு ஐக்கிய தீபம் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பிடம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மக்கள் பயன்பாட்டுக் கெனத் திறந்து வைக்கப்படும்.

நெடுந்தீவு கிராமசபையின் உறுப்பினராக இருந்த அமரர் இ.கந்தையாவின் ஞாபகார்த்தமாக நெடுந்தீவு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளர் க.கோபாலபிள்ளை இந்த பஸ் தரிப்பிடத்தை அமைக்க உதவியுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் றெக்சியன், உப தலைவர் எஸ்.கோபாலசிங்கம் ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைப்பார்கள். (த-7)

# வினைத்திறமை காண் பரீட்சை

குருநகர், டிசெ.18

பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II இல் கடமை புரிபவர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை அன்று காலை9மணிதொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும். (த-51)

# நிலுவைகளை உடன் செலுத்தாவிட்டால் முன்னறிவித்தலின்றி மின் துண்டிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ். குடாநாடு முழுவதும் உள்ள இலங்கை மின்சார சபையின் பாவனையாளர்கள் தமது மின்சார நிலுவைகளை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன் செலுத்தத் தவறின் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மின் துண்டிக்கப்படும் என்று பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

அரச மற்றும் தனியார் மின்பாவனையாளர்கள் அனைவரும் தமது மின்சார நிலுவைகளை உடன் செலுத்த வேண்டும். எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் இதனைச் செலுத்த தவறும் பட்சத்தில் முன்னறிவித்தல் இன்றி மின்சாரம் துண்டிக்கப்படும்.துண்டிக்கப்படும் மின் இணைப்பை மீளப்பெறுவதற்கு மின்சார நிலுவைப் பணத்துடன் சேர்த்து மீள்இணைப்புக் கட்டணமாக 800 ரூபா அறவிடப்படும்.

இந்த மின்சார நிலுவைப் பணத்தை யாழ்.கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள மின்சார அலுவலகத்திலும்,மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதி, சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி கிளைகளிலும் செலுத்த முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

# கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்தும் அங்கத்தவரை இணைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கிளைகள் ஊடாக அங்கத்தவர்களைத் தொடர்ந்தும் இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாகத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

அனேமான சங்கங்கள் கிளைகளில் உறுப்பினர்களை இணைப்பதில் அசமந்தப்போக்கைக் கடைப்பிடித்து வருகின்றன. அதேசமயம் சில சங்கங்கள் தொடர்ந்தும் கிளைக்கான உறுப்பினர்களை இணைப்பதில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றன. சங்கங்களில் மக்களின் விழிப் புணர்வை மேலும் அதிகரிப்பதற்கு இவ்வாறு கிளைக்குழு உறுப்பினர்கள் இணைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு சங்கக் கிளைகளிலும் பயனாளிகள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி உறுப்பினராக முடியும்- என்றார். (த-26)

# இறால் குஞ்சுகள் தொகையாக சிக்கும் சிறிய 'கண்' வலையை பயன்படுத்தாதீர்

### கடற்றொழிலாளர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ.18

கடற்றொழிலாளர்கள் சிறிய கண் வலையைப் பயன்படுத்தி இறால் பெருக்கத்தைத் தடை செய்ய வேண்டாம்!

இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் கேட்டுள்ளார்.

தற்போது இறால் பெருகும் பருவகாலம் ஆரம்பித்து விட்டது. சிறிய இறால் குஞ்சுகள் மூன்று மாத காலத்தில் உணவுக்குப் பயன்படுத்தக் கூடிய நிலைக்கு வளர்ந்து விடும். எனவே தற்போது குஞ்சுகளாகவுள்ள இறால்களைப் பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சிறிய கண் வலை பயன்படுத்துவதன் காரணமாகக் கடற்றொழிலாளர்களிடம் இறால் குஞ்சுகள் பெருந்தொகையில் சிக்கிக் கொள்கின்றன.

இதனைத் தவிர்க்க சிறுகண் வலை பயன்படுத்துவதை விட்டுவிடுங்கள்.

இறாலைக் குஞ்சுகளாப் பிடிப்பதன் மூலம் கடற்றொழிலாளர்களுக்கே வருமான இழப்பு ஏற்படும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அராலி, பொன்னாலை, காரைநகர் ஊரி, தம்பாட்டி ஆகிய பகுதிகளே அதிகம் இறால் உற்பத்தியாகும் இடங்கள் எனவும் உதவிப் பணிப்பாளர் மேலும் கூறினார். (ஒ-14-23)



சங்கானையில் புதிதாக அமைக்கப்படவுள்ள பஸ் நிலையத்தின் அடிக்கல் நாட்டு நிகழ்வில் சித்தன்கேணி சிவன் கோயில் சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் ஆசியுரை வழங்குகிறார். வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் உட்பட சபை உறுப்பினர்கள் அருகில் உள்ளனர். (த-28)

### யாழ். நகர் கடைகள், கடற்கரைகளில் தேடுதல்

# தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டுத் தீயிட்டு அழிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.17

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் வலைகளைக் கைப்பற்றி அழிப்பதற்கான திடீர் தேடுதல் வேட்டை நேற்று யாழ். நகரப் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் கடற்கரையோரங்களில் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்டக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையிலான திணைக்கள உத்தியோகத்தர்களே இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் யாழ். நகரிலுள்ள ஐந்து கடற்றொழில் உபகரண விற்பனை நிலையங்களில் தேடுதல் நடத்தினர். அப்போது இரு விற்பனை நிலையங்களிலிருந்து ஒரு தொகுதி தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேசமயம் காக்கைதீவுக் கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது சுமார் 50 கிலோ எடையுள்ள தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டன. அவை பின்னர் அந்தப் பகுதியில் வைத்தே அவை தீமூட்டி அழிக்கப்பட்டன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மண்டைதீவுக் கடலில் வைத்தும் மீனவர்களிடம் இருந்து ஒரு தொகுதி தங்கூசி வலை கைப்பற்றப்பட்டு தீயிட்டு அழிக்கப்பட்டது. (ஒ-14-26)

# சாவகச்சேரி நகரப் பகுதி வீதிகளுக்கு மக்கள் பங்களிப்புடன் மின் விளக்குகள்

### மின் கட்டணத்தையும் மக்களே செலுத்த ஏற்பாடு

தென்மராட்சி,டிசெ.18

சாவகச்சேரி நகரம் மக்களின் பங்களிப்புடன் ஒளியேற்றப்படவுள்ளது. சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்களின் பங்களிப்புடனான குறைந்த மின்வலுவுடன் கூடிய வெளிச்சத்தினைத் தரவல்ல வீதி விளக்குகள் பொருத்தும் செயற்திட்டம் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சபை எல்லைக்குட்பட்ட பல வீதிகளில் மின்விளக்கு பொருத்துமாறு வரியிறுப்பாளர்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருவது தொடர்பாகக் கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையினால் முன்வைக்கப்பட்டது.

தற்போது குறைந்த மின்வலுவுடன் கூடிய செளிச்சத்தை தரவல்ல மின் விளக்குகள் பாவனைக்கு வந்துள்ளதால் மக்கள் கோரும் இடங்களில் வீட்டு உரிமையாளரின் சம்மதத்துடன் அவரது மின் இணைப்பிலிருந்து வீதி விளக்குக்கு மின்சாரம் பெற்றுத் திட்டத்தினை மேற்கொள்ளலாம்.

வீதி விளக்குப் பொருத்துவதற்கான செலவுகளையும் நகர சபை பொறுப்பேற்றுக் கொள்ளும். அதேவேளையில் அந்த வீதி விளக்கின் மாதாந்தக் கட்டணமாக ரூபா 29 மட்டும் வீட்டுக்காரர் செலுத்த வேண்டும் என சபையினால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு நல்குவதுடன் இந்தத் திட்டத்தில் இணைய விரும்புவோர் நகரசபையுடன் தொடர்பு கொள்ளுமாறு நகரசபைத் தலைவர் இ.வேதசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (த-207)

## வீடு வாடகைக்கு

உடுவில் டச் வீதியில் மகளிர் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளும் (4 அறைகள் கொண்ட நவீன மேல்மாடி மட்டும்) வாடகைக்கு உண்டு.
குறிப்பு: குடும்பத்தினருக்கு அல்லது மாணவி களுக்கு (மாணவிகளுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.) வழங்கப்படும்.
தொடர்பு: 0773851342
E Mail : kalanithy 18@hotmail.com

## உங்கள் மழலைகளின் பிரகாசமான எதிர்காலத்திற்கு!!!!!

உங்களின் கனவு உங்கள் மழலை பற்றியதா!!!
உங்களின் கனவு நிஜமாக வேண்டுமா!!!



### யாழ் மண்ணில் இதோ விரைவில் உதயமாகிறது பாலர் முன்பள்ளி

[ஆங்கில மொழி மூலம்] [English medium]



**Lake land inter-American school Montessori & day care centre**

கொழும்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் Lake land inter American school இன் பாலர் முன்பள்ளி (ஆங்கில மொழி மூலம்) தற்போது யாழ்.மண்ணில் எதிர்வரும் தை மாதம் முதலாம் திகதி (15.01.2012)-2012 ஆரம்பிக்கப் பட உள்ளது. இந்த முன்பள்ளியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உங்களு டைய இடத்திற்கு முந்துங்கள் தாமதிக்க வேண்டாம்.

குறிப்பு:
- இருபாலாருக்குமான விண்ணப்பங்கள் பெற்றோர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.
- வயதெல்லை-03வயது தொடக்கம் 05வயது வரை விண்ணப்பப்படி வங்களை கீழ்க்காணும் முகவரியில் காலை 9.00 மணி முதல் மாலை 04.00மணி வரையும் சனிக்கிழமைகளில் 12.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

154,பிறவுண் வீதி,
(Aerolanka office அருகில்) யாழ்ப்பாணம்.

Our Vision
To become a model school which transforms personalities into academically sound, physically healthy,Multi-skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

இயக்குநர். (021-4923390) (சி-6835) (2-6)

## துயர் பகிர்கின்றோம்

எமது ஆசிரியர் நலன்புரிக்கழக உறுப்பினரான
திருமதி ஜசிந்தா திருமுருகராஜன் அவர்களின்
அன்பு மாமன்

### பொன்னம்பலம் தேவராஜா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ துடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா,
வித்தியாசாலை. (11730) (10,6,7)

## பிரதம செயலாளர் செயலகம்- வடமாகாணம்

### கேள்வி அறிவித்தல்

**2012 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவைக்கான ஒப்பந்தம்**

1. பிரதம செயலாளர் பெறுகைக்குழுவினால் வடமாகாண சபையின் தலைமைக் காரியாலயங்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு சேவை (Security service) வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. பெறுகைதாரர் தனிநபராகவோ அல்லது நிறுவனமாகவோ பாதுகாப்புச் சேவையை வழங்கும் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. பெறுகை தாரரின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் நகரிலிருந்து 10 Km சுற்றுவட்டத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமிழ்மொழி மூலமான கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பெயரில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000 /= ஐ காசாகச் செலுத்தி 19.12.2011 தொடக்கம் 27.12.2011 வரை மு.ப. 9 தொடக்கம் பி.ப. 4 வரை அலுவலக நாள்களில் மாகாணத் திறைசேரி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்வி ஆவணங்கள் 30.12.2011 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், பிரதம செயலாளர் பெறுகைக்குழு, மாகாணத் திறைசேரி, வடமாகாணம், 79/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது பிரதிப் பிரதம செயலாளர்- நிதி அவர்களின் அறையிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பொறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

ர. விஜயலட்சுமி,
தலைவர், பிரதம செயலாளர் கேள்விச் சபை,
187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C/6948)(6,7,8)

## தேவை

49 வயதுடைய ஆண் ஒருவருக் கு(B+) உடல் ஆரோக்கியமான ஒருவரின் சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தகுந்த சன் மானம் வழங்கப் படும்
தொடர்பு:
0712743641
0773867544

## யாழ் நகரில் සිංහල පංති சிங்கள வகுப்புகள்

எழுத, பேச, வாசிக்க, பூரணபயிற்சி
புத்தம் புதிய ஆரம்பம்
சனி, ஞாயிறு தினங்களில் 7am - 7 pm
மாணவர் வாழ்க்கைப்படை அட்டவணை
தலைநகர் பிரபல ஆசிரியர்
K.பரமேஸ்வரன்
ஆசிரியர் தொடர்புக்கு 0777 624 510
விக்னா கல்வி நிறுவனம்
52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

## கட்டாக்காலிகளால் பயிர் சேதம்

கட்டாக்காலிக் கால்நடைகளால் மண்டைதீவில் நெற்பயிர்கள் சேதமாக்கப்பட்டு வருவதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போது அங்கு நெற்பயிர்கள் முளைக்கத் தொடங்கியுள்ள நிலையில் கட்டாக்காலி மாடுகள் வயல்களில் கூட்டம் கூட்டமாகப் புகுந்து பயிர்களை நாசம் செய்வதாகவும் இதனால் விவசாயிகள் பெரும் சட்டத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விவசாய சம்மேளனங்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(த-7)

## கனடா, நாட்டிற்கான Work Permits

கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி நாடுகளுக்கான சுற்றுலா விசா ஒழுங்குகள்

- Schengen நாடுகளிற்கான Business Visa, Resident Permits.
- UK Student Visa

அனைத்து நாடுகளிற்குமான, அனைத்து வகையான விசாக்களுக்குமான பண வைப்புக்கள் சிறந்த வங்கிகளுனூடாக செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு :
**Euro Profile**
16B, E.S. Fernando Mawatha, Colombo - 06
நாதன் - 0779874333 நிஷ்னா - 0778885903

## ENGLISH CLASSES Grade -01 -O/L

ஆங்கிலத்தில் பின்தங்கிய மாணவர்களின் கல்வியை முன்னேற்ற மிகச் சிறந்த முறையில் ஆங்கிலம் கற்பிக்கப்படும். இங்கு படித்த மாணவர்களின் பெறுபேறுகள் உயர்மட்டமே 20.12.2011 புதிய பிரிவு ஆரம்பம்.
தொ.பே.:0773027375 யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## மணமக்கள் தேவை

எம்மிடம் யாழ் இந்து, RC மணமக்களும் ஐரோப்பா PR உடைய மணமக்களும் 70ம் ஆண்டு தொடக்கம் 93 ஆம் ஆண்டு வரையான மணமக்களின் ஜாதகங்களும் உண்டு. தொடர்பு: 0775508523/ 0788160246, E.mail-nanthini2222@gmail.com.

## மணமக்கள் தேவை

நாடுபூராகவும், இந்து, கிறிஸ்தவ அனைத்து இனத்தவர்களில் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன்,SLAS, வங்கி, விரிவுரையாளர் அனைத்து துறைசார்ந்த பட்டதாரிகள், ஆசிரியர், உயர் பதவி வகிப்பவர்கள் வெளிநாடு, பிஸ்னஸ் சுயதொழில், விவாகரத்து, அரசு தனியார் துறை சைவபோசனம் மணமக்களின் விவரங்களுக்கு அணுகவும்.
S.K சிவகரன்( அமைப்பாளர்)
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
42/11, கெனடிலேன், இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
0779694009,0750741451

## வீடு வாடகைக்கு

உரும்பிராய் கிழக்கு, அரச விதியில் பலாலி வீதியில் இருந்து 50m தூரத்தில் வாகனத் தரிப்பிடத்துடன் அமைந்த 3000 சதுர அடி 5 அறை, சமையலறை, விசாலமான வரவேற்புக் கூடமும் விறாந்தையும் அமைந்த வீடு 12 பரப்பு காணியுடன் வாடகைக்கு உண்டு. நிறு வனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு:0776036470

## சேவை

கனடா, இத்தாலி போன்ற நாடுகளுக்கு விசிட் விசா, வேர்க் விசா, P.R விசா, பிஸ்னஸ் விசா ஒழுங்குகள் செய்து தருவதுடன் விசாக்களுக்கான விண்ணப்பங்கள் எம்பஸிக்கு சமர்ப்பிக்கப் பட்டு விசா நிராகரிக்கப்பட்டிருந்தால் அதற்கான காரணங்களை கண்டறிந்து மீண்டும் விசா கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் எம்மால் குறுகிய காலத்தில் நம்பிக்கையுடன் செய்து தரப்படும். தொடர்பு: 0772484403, 0112363880

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.திருமதி பாக்கியநாதன் தம்பதிகளின்
செல்வப் புதல்வி

### திருமதி கிறிஸ்டின் றோஸ் அஞ்சலோ



கொழும்பு பல்கலைகழகத்தில் சட்டமாணி பட்டம் பெற்று, பிரசித்த நொத்தாரிஸ், சத்திய பிரமாண ஆணையாளர் மற்றும் கம்பனி செயலாளர் ஆக கொழும்பு உயர் நீதி மன்றத்தில் 12.12.2011 அன்று சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் மேலும் பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
குடும்பத்தினர், உறவினர்கள்.
(11796) (10,6,7)

## Metro Travels

### விசேட விமானக் கட்டணங்கள்



| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | Rs.13800 |
| Colombo-Tiruchirapally-Colombo | Rs.14500 |
| Colombo-Doha | Rs.22500 |
| Colombo-London | Rs.38000 |
| Colombo-Toronto | Rs.82000 |
| Colombo-Singapore-Colombo | Rs.30800 |
| Colombo-Frankfurt | Rs.50000 |
| Colombo-Milan | Rs.38000 |
| Colombo-Rome | Rs.51500 |
| Colombo-Paris | Rs.50000 |
| Colombo-Zurich | Rs.39000 |

All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance,
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply

ஐயப்பன் பக்தர்களுக்கு இந்தியா சென்று வர விசேட விமானக் கட்டணங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404, 0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm (6822 )(1,6,9)

## சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திர சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய புனருத்தாரண சபை

### அறிவித்தல்

ஆலய புனருத்தாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அடியார்கள் தாங்கள் நிதியுதவி செய்ய விரும்பின் ஆலய காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதுடன் அல்லது மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் 72676469 கணக்கிலக்கத்திலும், வெளிநாடுகளில் வாழும் அடியார்கள் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் BCEYLKLX BOC 72676469 கணக்கிலக்கத்திலும் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பாள் பணிகளில்
ஆலய புனருத்தாரண சபையினர்.
(11732)(2,6,7)

## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்...



திருமதி **தம்பு செல்லமுத்து**
(தம்பு ரீச்சர்)
(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர்- யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.)
திதி: 18.12.2011
மலர்வு 29.04.1940
உதிர்வு 26.12.2002

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த
உங்கள் நினைவுகளும்
இல்லத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய உங்கள் வாழ்வும்
எத்தனை ஆண்டுகளானாலும் அணையாத தீபமாய் என்றும் ஒளிரும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பின்: கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'திருவேரகம்',
அல்லாரை, மீசாலை. (11738) (3,6,7)


# Transfer To செயற்றிட்டத்துடன் கைகோர்த்துள்ள HUTCH நிறுவனம்

பல்வேறு வகையான புதிய சேவைகளை தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் Hutch நிறுவனம் புரட்சிகர சேவையான Transfer To திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

இந்த புதிய திட்டத்தின்கீழ் Hutch பாவனையாளர்கள்; தமது நண்பர்கள், உறவினர்களிடமிருந்து SMS மூலம் தமது Hutch இணைப்புகளுக்கான அழைப்புக்களை மேற்கொள்வதற்கு தேவையான பணத்தை மாற்றீடாக பெற்றுக்கொள்ளலாம். Transfer To சேவை மூலம் பாவனையாளர்களுக்கு பணத்தை மாற்றீடு செய்ய விரும்பும் போது Top up முறைமையைப் போன்றே Reload முறைமையையும் பயன்படுத் தலாம்.

பாவனையாளர்களுக்கும் அவர்களது நண்பர்கள் உறவினர்களுக்கும் இடை யிலான நெருக்கத்தையும் பிணைப்பையும் அதிகரிப்பதற்காகவே இச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டதாக Hutch நிறுவனம் தெரிவிக்கின்றது.

Transfer To சேவை அறிமுகப் படுத்தப்பட்டதன் பின்னர் கருத்து தெரிவித்த Hutch நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி ஆனந்த் பிரகாஷ் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி எமது பாவனையாளர்கள் எதிர்பாராத சேவைகளை அறிமுகப்




படுத்துவதையே எமது நிறுவனம் தனது நோக்கமாக கொண்டுள்ளது.

Transfer To சேவையூடாகவும் இதனையே நாம் எதிர்பார்க்கின்றோம். எமது வாடிக்கையாளர்கள் வேலைப் பளுவில் சிக்குண்டபோதிலும் வெளி நாடுகளிலுள்ள தமது உறவினர்கள் நண்பர்களுடன் உரையாடுவதற்கான சேவையை ஏற்படுத்திக்கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வசிக்கும் ஏராளமான இலங்கையர்களைக் கருத்திற் கொண்டே இந்த சேவையில் இணைய தீர்மானித்தோம்.

Hutch பாவனையாளர்களின் உறவினர்களில் 70 வீதத்துக்கும் அதிகமானோர் வெளிநாடுகளிலேயே வாழ்கின்றனர். அவர்களுக்கிடையில் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடல் நடவடிக்கைகள் எவ்விதமான அசௌகரியங்களின்றி முன்னெடுக்க இத்திட்டம் உதவுகின்றது.

எமது நிறுவனம் வாடிக்கையாளர்களை ஒருபோதும் தனிமைப்படுத்தாது வாடிக்கையாளர்களின் நலன்களை கருத்திற்கொண்டே செயற்படுகின்றது என Hutch நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் பொதுமுகாமையாளர் சஞ்சய செனரத் தெரிவித்தார்.

கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களின் முற்கொடுப்பனவு வலையமைப்பிற்குள் சர்வதேச இணைப்புக்களை ஏற்படுத்தும் சர்வதேச பூகோள நிறுவனமாக Transfer To செயற்பட்டு வருகின்றது.

முற்கொடுப்பனவு பாவனையாளர்கள் 3.6 பில்லியனுக்கும் மேற்பட்டோரை ஐந்து கண்டங்களிலும் தன்னகத்தே கொண்டுள்ள இந்த நிறுவனம் 185 தொலைபேசிநிறுவனங்களைஇணைத்துக்கொண்டு 70 நாடுகளில் தமது சேவையை வியாபித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் என்றும் எதிர்காலத்தில் இவ்வாறான புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி Hutch பாவனையாளர்களுக்கு பல்வேறு புதிய சேவைகளை வழங்க எதிர்பார்ப்பதாக Hutch நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி ஆனந்த பிரகாஷ் தெரிவித்தார்.

# ஆசியாவில் நெல் உற்பத்தி அதிகரிப்பு

இந்த ஆண்டில் ஆசியாவின் நெல் உற்பத்தி மூன்று சதவீதத்தினால் அதிகரிக்கும் என உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் இறுதியாக வெளியிட்ட (latest crop prospects and food situation report) அறிக்கையில் எதிர்வு கூறியுள்ளது. ஆசியாவில், கடந்த ஆண்டு சுமார் 627.7 மில்லியன் தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. இதுவே இந்த ஆண்டில் 646.2 மில்லியன் தொன் (3%) என நெல் உற்பத்தி அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய அதிகரிப்புக்கு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகள் நெல் உற்பத்தியில் மீட்சி கண்டு வருகின்றமையே காரணம் என உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில், முறையே 143, 7.2 மில்லியன் தொன் நெல் கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டது.

இதுவே இந்த ஆண்டில் முறையே 154.5, 9.7 மில்லியன் தொன் என முறையே 8%, 35% நெல் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேபோல சீனாவின் நெல் உற்பத்தி, முன்னைய ஆண்டை விட இந்த ஆண்டில் (203 மில் தொன்) மூன்று சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# எடிசலாட் குழுமத்தின் புதிய பிரதம நிதி அதிகாரி

எடிசலாட் குழுமத்தின் புதிய பிரதம நிதி அதிகாரியாக சேர்கன் ஓகான்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிறுவனத்தின் சர்வதேச மற்றும் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எழுந்துள்ள தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு மாத காலப்பகுதியினுள் இவர் நிறுவனத்துடன் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொலைத்தொடர்பாடல் துறையில் ஓகான்டன் சர்வதேச ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் பிரசித்தி பெற்றவராவார். இவர் டர்க்செல் நிறுவனத்தில் பல ஆண்டு காலம் கடமையாற்றிய அனுபவத்துடன் எடிசலாட் நிறுவனத்துடன் இணைந்துகொள்ள தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தனது உத்தியோக வாழ்க்கையை 1992 இல் பிரைஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனத்துடன் ஆரம்பித்திருந்தார்.

அதன் பின்னர் டர்க்செல் நிறுவனத்தின் குழும பிரதம நிதி அதிகாரியாக பதவியேற்றிருந்தார்.

டர்க்செல் நிறுவனத்தில் நிதி செயற்பாடுகளை சுமார் 8 நாடுகளில் தலைமைத்துவமேற்று செயற்படுத்தியிருந்த அனுபவத்தை கொண்டுள்ளார்.



ஒன்றிணைத்தல், சிறப்பான செயற்பாடுகளுக்கு மிகவும் பிரபல்யம் பெற்ற நபராக இவர் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய நியமனம் குறித்து எடிசலாட் குழுமத்தின் பிரதம நிறை வேற்று அதிகாரி அஹமட் அப்துல்கரீம் ஜுல்ஃபார் கருத்து தெரிவிக்கையில், குழுமத்தின் பிரதம நிதி அதிகாரியாக சேர்கான் ஓகான்டன் நியமிக்கப்பட்டமையானது புதிய வியூகங்களை வகுக்க பெரும் பக்கபலமாக அமையும். இவரின் அனுபவம் இதற்காக பெரிதும் உதவியாக அமையும் என்றார்.

இந்த நியமனம் குறித்து ஓகான்டன் கருத்து தெரிவிக்கையில், எடிசலாட் குழுமத்தினால் தெரிவு செய்யப்பட்டமை பெரும் பேறாக அமைந்துள்ளது. நிறுவனத்தின் வளர்ச்சிக்கு எனது முழு பங்களிப்பையும் வழங்க தயாராகவுள்ளேன் என்றார். பொஸ்பொரஸ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான சேர்கன் ஓகான்டன், 2000 ஆம் ஆண்டில் டர்க்செல் நிறுவனத்துடன் இணைந்துகொண்டிருந்தார்.

# 20 வருட பூர்த்தியை கொண்டாடும் ஹப்பி கவ்



ஹப்பி கவ் இலங்கையில் தனது 20 வருட பூர்த்தியை அண்மையில் கொண்டாடியிருந்தது. இந்த நிகழ்வுக்காக தனது வர்த்தகப் பங்காளர்கள், விநியோகத்தர்கள், விற்பனையாளர்கள் மற்றும் ஊடகத்துறையினரை அழைத்திருந்தது.

ஸ்டாஸன் பூட்ஸ் நிறுவனத்தின் மூலம் 1991 ஆம் ஆண்டு இலங்கையில் ஹப்பி கவ் சீஸ் தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததிலிருந்து படிப்படியாக சந்தையில் முன்னிலையை வகிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்ததுடன், தற்போது சீஸ் சந்தையில் ஹப்பி கவ் தயாரிப்புகள் இலங்கையில் முன்னணியில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

வோளர்லி ஜிஇஎஸ் எம்பிஎச் நிறுவனத்தின் தலைவர் ஜெராட் வோளர்லி இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார். இந்நிகழ்வில் நிறுவனத்தின் ஏற்றுமதி முகாமையாளர் கிறிஸ்டியன் கிறபர் கலந்து கொண்டிருந்தார்.

இந்த நிகழ்வில் ஹப்பி கவ் சீஸ் வர்த்தக குறியீட்டு முகாமையாளர் தனுக மாரசிங்க கருத்து தெரிவிக்கையில், 20 வருடங்களின் முன்னர் ஹப்பி கவ் சீஸ் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து பெருமளவானோரின் மனதை கவர்ந்த சீஸ் வகையாக திகழ்ந்து இலங்கையின் முதல்தர சீஸ் நாமமாக தெரிவாகியுள்ளது.

எமது உண்மையான வாடிக்கையாளர்களுக்கு நாம் எமது நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் தொடர்ந்தும் எமது உயர் தரத்தையும், செழுமையையும், குணநலன்களையும் பேண நாம் திட்டமிட்டுள்ளோம். எதிர்காலத்தில் நாம் சமூக பொறுப்புணர்வு நடவடிக் கைகளையும் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

தற்போது இலங்கையின் மொத்த சீஸ் சந்தையின் 85 வீதமான பங்கை ஹப்பி கவ் கொண்டுள்ளது. மேலும் தனது விநியோக கட்டமைப்பை விஸ்தரிக்க ஸ்டீசன் பூட்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் டெங்கு விழிப்பூட்டல் பிரசாரம்

யூனியன் அஸ்யூரன்ஷ் நிறுவனத்தினர் தமது சமூக சேவையின்ஒரு பகுதியாக டெங்கு தடுப்பு விழிப்பூட்டல் நடவடிக்கையினை அண்மையில் வடமராட்சிப் பிரதேசத்தில் மேற்கொண்டனர். யாழ் பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் தலைமையில் பருத்தித்துறை கிளை முகாமையாளர் த.குபேந்திரன் மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள் பருத்தித்துறை நகரம் மற்றும் மந்திகை ஆதார வைத்தியசாலை பகுதிகளில் பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டல் நடவடிக்கையினை மேற்கொண்டதுடன் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் மக்கள் மத்தியில் விநியோகம் செய்தனர்.

அண்மைக் காலமாக டெங்கு நோயின் தாக்கம் யாழ். குடாநாட்டில் அதிகரித்து காணப்படும் இவ் வேளையில் மக்கள் மத்தியில் குறிப்பிட்ட நிறுவனத்தினர் விழிப்பூட்டல் நடவடிக்கையினை மேற்கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயம் என கலந்துகொண்டு பயனடைந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

# ரச கணக்காய்வு அறிக்கை இனி இணையத்தில் கிடைக்கும்


நாட்டில் முதற்தடவையாக அனைத்து கணக்காய்வுகளையும் இணையத்தில் வெளியிடுவதற்கு கணக்காய்வாளர் திணைக்களம் தீர்மானித்துள்ளது. www.auditorgeneral. gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக இந்த அறிக்கைகளை மக்கள் பார்வையிட முடியும் என்று கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ. எஸ். சமரவீர குறிப்பிட்டார். இதன் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகளின் தரம் குறித்து மக்கள் அறிந்து கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார். பல்வேறு கட்டங்களின் கீழ், ஆயிரக்கணக்கான கணக்காய்வு அறிக்கைகளை தமது இணையத்தளத்தின் ஊடாக வெளியிடவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் கூறினார். ஜனவரி மாதம் முதல் அறிக்கைகளை இணையத்தின் ஊடாக மக்கள் பார்வையிட முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

Baby Cheramy

# அன்பும் பரிசும்




அல்டோ கார்கள் 3



தங்க மாலைகள் 60



ஸ்கூட்டி பெப்கள் 6



கையடக்கத் தொலைபேசிகள் 60

## அன்புடன் பொழியும் பரிசுகள் உங்களுக்காகவே !

### எப்பொழுதுமே தூய அன்பை மட்டும் வாரி வழங்கும் பேபி ஷெரமியிடமிருந்து உங்கள் வாழ்வை மெருகூட்டும் பரிசு மழை

ஒவ்வொரு மாதமும் குலுக்கலில் கீழ்வரும் பரிசுகளைப் பெற்று கொள்ளுங்கள்

1வது பரிசு - சுசுகி அல்டோ கார் 2வது பரிசு - ஸ்கூட்டி பெப் 2

3வது பரிசு - தங்க மாலைகள் 20 4வது பரிசு - கையடக்கத் தொலைபேசிகள் 20

**போட்டி விதிமுறைகள்**

1. குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.
2. பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
3. பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேடட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

**குலுக்கல் நடைபெறும் திகதிகள்**

முதலாவது குலுக்கல் 2011 டிசம்பர் 15
இரண்டாம் குலுக்கல் 2012 ஜனவரி 15
மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

**போட்டியில் கலந்துகொள்ளும் முறை**

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

"பேபி ஷெரமி, அன்பும் பரிசும்"
த.பெ. இல. 2285, கொழும்பு





Baby Cheramy
தூய அன்பு


WP / GT / 3408

# படங்கள் தரும் பதிவுகள்



யாழ். முற்றவெளிப் பகுதியை நவீன முறையில் புனர் நிர்மாணம் செய்வதற்கான முதற் கட்டப் பணிகள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கு இடமாக இந்தப் பகுதி புனரமைத்து அழகு படுத்தப்படவுள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் சம்பந்தப்பட்ட திணைக் களங்களின் தலைவர்கள் கலந்து கொண்டு பணிகளைத் தொடக்கிவைத்தனர். (ம-26)





நெல்லை லதாங்கியின் 'மீண்டும் வசந்தம்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் அ.சண்முகதாஸ் மங்கள விளக்கேற்றுகிறார். கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், வடக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் மு.ராதாகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர். (236)



சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவனின் இசைப்பணியை பாராட்டி தென்மராட்சி இசை நடன ஆசிரியர் சங்கத்தால் கௌரவிப்பு விழா அண்மையில் நடத்தப்பட்டது. விழா நாயகனுக்கு இசை நடன ஆசிரியர் திருமதி சுந்தரவல்லி ஆனந்தராசா விருது வழங்கிக் கௌரவிக்கிறார். (207)



எமது சமூகத்தில் இடம்பெறும் பிரச்சினைகளும் சமூகப் பாதிப்புகளும் அவற்றில் இருந்து மீளும் வழிமுறைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நல்லூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வி.இந்திரன், நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் கிறிஸ்டி யோசப், சொண்ட் நிறுவனத் தலைவர் செந்துராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.





ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர்கள் பாடசாலைக் கீதம் இசைக்கின்றனர். இதில் கௌரவிப்புப் பெற்ற உ.ஜெனார்த்தனி- 171, கி.ஆரணி- 169, இ.லக்ஷிகன்-158, க.கிருபாட்ஷன்- 154, சு.சர்மிளா - 150 , ச.ஜென்சிகா- 149 ஆகியோர்.



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம் பொலிஸார் மாணவரிடையே நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் லயன்ஸ் கழகப் பொருளாளர் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார். (207)

# 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

| | |
|---|---|
| மலர்வு | உதிர்வு |
| 05 - 03 - 1954 | 23 - 12 - 2005 |



## அமரர் நல்லதம்பி தர்மலிங்கம்


**திதி:- 18.12.2011**

ஒளி விளக்கே
ஆண்டுகள் ஆறு கழிந்தாலும்
ஓயாது உன் நினைவுகள்
நீர் தூக்கத்தில் இருப்பதாய்
எம் துயர் துடைக்கின்றோம் தந்தை
பிறவிகள் பல காத்திருப்போம்
உம் தூக்கம் கலையா எந்தை.....

*உங்கள் பிரிவால் வாடும்*
-குடும்பத்தினர்.

டச்சு வீதி, சாவகச்சேரி.

# என்றும் நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் சிரார்த்த தினமும்



தோற்றம்
28.11.1933

மறைவு
29.12.2010

## அமரர் பொன்னுச்சாமி நாகலிங்கம்

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்களுடன் சங்கமித்துக் கொண்டிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லிங்கபவனம்,
கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு. [8030](3.6.9)

என்றும் உங்கள்
நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

### வைத்திய அதிகாரி நியமனம்

புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக பதிவு வைத்திய அதிகாரி எஸ்.பேரின்பநாயகம் இம்மாதம் முதலாம் திகதி பதவியேற்றுள்ளார். தெல்லிப்பழைஆதார வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய இவர் வடமாகாண அளுநரின் ஆலோசனைக்கிணங்க வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளரால் புங்குடுதீவு வைத்திய சாலையில் கடமையைப் பொறுப்பேற்ற நாளில் இருந்து இரண்டு மாதங்கள்வரை கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த-300)

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
சிவலோகநாயகி
குணபாலசிங்கம்



வையத்துள்
20.05.1937

தெய்வத்துள்
31.12.1999

திதி: நவமி

அன்புடனே எமை ஈன்று
ஆசையுடன் வளர்த்தெடுத்தீர்
இன்பமாக நாம் வாழ
கைகை பலவும் செய்து வைத்தீர்
உயர்வுடனே நாம் விளங்க
ஊழியமும் செய்து வைத்தீர்
எவ்வளவும் இருந்தென்ன நீர் இன்றி
ஏங்குகின்றோம் நாம் இங்கு.

உசன்

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(11763)(3.6.7)

## யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. (இந்துக்கல்லூரி) காரைநகர்

## பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம் : நடராஜா ஞாபகார்த்த மண்டபம்
காலம் : 01.01.2012 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 2.00 மணி

பாடசாலையின் எதிர்கால வளர்ச்சி கருதி ஆயுள்கால அங்கத்தவர்களாக இணைந்து தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

பொ.சிவானந்தராசா,
அதிபர்,
தலைவர்.

வே.சபாலிங்கம்,
செயலாளர்.

(C/6929) (10,6,7)



# JAFFNA ELECTRICAL நிறுவனத்தின்
## (Show Room)

விசேட விலைக்கழிவும் (10% முதல் 30% வரை)

இலவச கொடுப்பனவுகளும்

01.12.2011 முதல் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

LG No 1 Dealer in SriLanka




# LG JAFFNA ELECTRICAL
## (Show Room)

141, Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008

Authorized Dealer for **Abans**

---

அநுக்குறைந்த அனுமதிக்கட்டணம் (Admission Fees) முதல் வருடத்திற்கு மட்டுமே!

# சர்வதேச தரம் வாய்ந்த BBS பாலர் பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும் January 2012 ற்கான புதிய அனுமதிகள்

- இதுவரை **BBS** இன் வளாகங்களில் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான சிறுவர்களில் 95 வீதமானோர் யாழ்குடாநாட்டின் அதிசிறந்த பாடசாலைகளில் கற்பதற்கான அனுமதி பெற்றிருப்பதுடன் 5 ஆம் ஆண்டு புலமை பரிசிலிலும் சித்தியடைந்துள்ளார்கள்
- உங்கள் வசதி கருதி யாழ்குடாநட்டின் பல்வேறு இடங்களிலும் சர்வதேச தரத்திலான தனியார் பாடசாலை.

## BBS இன் சர்வதேச பாலர் பாடசாலைகள் → Dr.Maria Montessori & Canadian Early Learning Method
ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்

### பாலர் பிரிவுகள்

- **Play Group (2+சிறார்களுக்கு)**
  Sensorial Activities
  விளையாட்டுக்களுடன் கூடிய அதிநவீனகற்கை நெறிகள்
  Song, Poems, Drama & Dialogue
- **Montessori (3+சிறார்களுக்கு)**
  மொழி அறிமுகம் - ஆங்கிலம்
  (Speech Skills) - தமிழ்
  எழுத்து அறிமுகம் - ஆங்கிலம்
  (Writing Skills) - தமிழ்
  எண்பயிற்சிகள் (Arithmetical Operations)
  Sensorial Activities
  Song, Poems, Drama & Dialogue
- **Pre-School (4+சிறார்களுக்கு)**
  எண், எழுத்து கருதுகோள்
  ஆங்கில பேச்சுத்திறன் செயற்பாடுகள் Audio, Visual
  Sensorial Activities
  Song, Poems, Nursery Rhumes, Drama & Dialogue
  அடுத்த கல்வியாண்டிற்கான முழுத்தகுதி நிலை

### பாலர பாடவிதானம

பாடசாலை ஆரம்பம் காலை - 7.30
பாடசாலை முடிவு மதியம் - 12.30

**வாரத்தின் 25 மணித்தியாலங்களுக்கான கல்விச்செயற்பாடுகள்**

| | |
|---|---|
| Language Skills - English | - 5 hrs |
| Language Skills - Tamil | - 4 hrs |
| - Maths | - 4 hrs |
| Sensorial Activities | - 2 hrs |
| Songs, Poem, Drama, Dialog | - 2 hrs |
| Art and Craft | - 2 hrs |
| Play Activities | - 3 hrs |
| Baratha Natyam | - 1.5 hrs |
| Computing | - 1.5 hrs |

**எம் அனைத்து சிறார்களும் பங்குபெற்றும் கல்விசார் நிகழ்வுகள்**

English Day & Concert
Sports Day
Bharatham Festival
Art & Craft Exhibition
Muthamilzh Vizhla
Pre-School Graduation and Crol Ceremony

### BBS இன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | - 140, கோவில் வீதி, நல்லூர் |
| கோப்பாய் | - பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | - 1ம் கட்டை, இராசவீதி, நீர்வேலி. |
| சாவகச்சேரி | - சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை அருகாமை |
| மானிப்பாய் 1 | - 252, ஆலடிசந்தி, யாழ்வீதி, மானிப்பாய். |
| மானிப்பாய் 2 | - சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| சுன்னாகம் | - Lakshmi (புதியநீதிமன்றம் அருகாமை) K.K.S.வீதி மல்லாகம் |
| புலோலி | - ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை. |
| அச்சுவேலி | - அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை |
| சங்கானை | - நிகர வைரவர் கோவிலடி, AGA Office அருகாமை |

**SPECIAL ENGLISH CLASSES**
For Professionals Including Doctors, Engineers, Nurses & Government Officials

**ENGLISH CLASSES FOR CHILDREN**
சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்
Pre-Foundation, Foundation- Level 1,2,3,4
School Syllabus Covered

Certificate in English,
Diploma in English,
Advanced Diploma in English

BRITISH COUNCIL **IELTS**
அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

British BUSINESS SCHOOL

# BRITISH BUSINESS SCHOOL

140, கோவில் வீதி நல்லூர். Contact : 021 2225796, 077 3627055, 0776646357

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு சியாமளா மில் ஒழுங்கையில் A9 வீதியிலிருந்து 200m தூரத்தில் 25 தென்னை மரங்கள் உள்ளதும் குடியிருப்புக்கு ஏற்றதுமான 9 பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு. (½ பகுதியாகவும் பிரித்துக் கொடுக் கப்படும்.) ( விலை பரப்பு ரூபா 4½ லட்சம்)

தொடர்பு: 0772445706, 0776622245

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஓய்வு பெற்ற அபிவிருத்தி உதவி ஆணையாளரும், மூளாயைச் சேர்ந்த

**செல்லத்துரை கனகசபாபதி**

(B.A.L.L.B Attorney At Law) இலங்கை உயர்நீதிமன்றில் 12.12.2011 அன்று சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேன் மேலும் பல சமூக சேவைகளை மேற்கொள்ள அவரை பல் லாண்டு காலம் வாழ வாழ்த்துக்கள் பல கூறுகின்றோம்.

**- நண்பர்கள்.**

(1764) (2-6-7)

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி மதிவேணி தயாபரன் அவர்களின் அன்புத் தந்தை

*அமரர் சீனியர் கிருஷ்ணபிள்ளை*

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிசங்கம். பிரதேச செயலகம், உருவில்.

(அ/6946) (2-6-9)

## வேலை ஆள்கள் தேவை

ரஜனி ஸ்ரூடியோவிற்கு புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதற்கும் போட்டோசொப் (Photoshop) டிசைனிங், வரவேற்பாளர், அழகுக் கலை நிபுணர்கள் போன்ற பதவிகளுக் கும் அனுபவமுள்ள/ அனுபவமற்ற ஆண்/ பெண் இருபாலாரும் உடனடியாகத் தேவை.

T.P. No. 0777388275, 0727388275

(C/8029)(6,7,8)

## VACANCIES

# Come & Grow with us

Asia Asset Finance Limited is a fully owned subsidiary of "**Asia Capital PLC**" and a finance company licenced and regulated by the Central Bank of Sri Lanka. Due to the expansion of our Branch Network* we are seeking young, dynamic individuals to join our growing team. We will be providing an attractive remuneration package and also the company is committed to rewarding employees with a stimulating and participative working environment with satisfying career opportunities.


## Marketing Executives – Lending/ Fixed Deposits

(Jaffna, Killinochchi, Mullaitivu, Oddusuddan, Mannar, Vavuniya, Trincomalee, Batticaloa, Kalmunai)

**Applicant Profile:**

- Possess very good results in GCE A/L Examination
- Graduate / undergraduate and those who are pursuing further studies in Commerce, Business Administration, Banking, Economics, Marketing, Finance, Accountancy, Agriculture, or any other related field will be preferd.
- Age less than 30 years.
- Have an outgoing personality with good inter-personal skills
- Be proficient in English & Tamil or Sinhala and be able to communicate effectively
- Be willing to work long hours and achieve given targets
- Possess a valid riding/ driving licenses

(Candidates will be recruited as trainees or Executives depending on qualification & experience.)




Please forward your CV including details of two non related referees and a passport size photograph to within 10 days of the advertisement indicating the position and Branch applied.

**The Manager**
**Human Resource Division**
**Asia Asset Finance Limited**
**No. 76/1, Dharmapala Mawatha, Colombo 3**
Tele: 0112574682-5 Fax: 0112 577477
E-mail: careers@asiaassetfinance.lk
Web: www.asiaassetfinance.lk

ASIA ASSET FINANCE LIMITED
Reg. No. PB 139

* Subject to approval of Central Bank of Sri Lanka

## வயலுக்கு உரம் போட்டு வீடு வந்தவர் தேநீர் அருந்தியவுடன் சாவு

வயலுக்கு உரம் வீசிவிட்டு வீடு சென்று தேநீர் அருந்தும் போது மயங்கி வீழ்ந்த வர் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் மரணமான சம்ப வம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மறவன் புலோவைச் சேர்ந்த கணபதிப் பிள்ளை குகானந்தன் (வயது-52) என்பவரே மரணமானவர் ஆவார்.

மரணம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக் குக் கொண்டுவந்ததை அடுத்து சாவகச் சேரி பதில் நீதிவான் செ.கணபதிப் பிள்ளை சாவகச்சேரி வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் உடற் கூற் றுப் பரிசோதனை மேற்கொண்டு உற வினர்களிடம் சடலத்தை ஒப்படைக்கு மாறும், சாவகச்சேரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி செல்வி இ.சசி கலா மூலம் விசாரணை நடத்தி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட் டார். (ஓ-15-207)

## Spoken English & Grammar

வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
By: Mr. B. Ruban (A/L Eng. Teacher & BBA) More Details 0779785749

## காணி விற்பனைக்கு

பரந்தன் சந்திக்கு அருகில் உறுதியுடன் கூடிய 1½ ஏக்கர் காணி உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்: 0773951525

## வீடு விற்பனைக்கு

கட்டுடை, மானிப்பாயில் 5 பரப்பு காணியில் 6 அறையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. 0772929468

## காணி விற்பனைக்கு

யாழ் நகரில் ராசாவின் தோட்டம் வீதியில் கிணற்றுடன் கூடிய மனை அமைக்கக் கூடிய 2¼ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு சுரேஷ்-0714303581

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு சிங்கங்கண்டி யில் 25 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. 0719190491

## விற்பனைக்கு, வாடகைக்கு

NPVS xxxx தொடர் இலக்கமுடைய தனிப் பாவனையில் உள்ள CB UNICORN Honda மோட் டார் (யாழ்ப்பாணம்),சைக்கிள் விற்பனைக்கும், கிளிநொச்சி உதயநகர் மேற்கில் வயலெஸ் பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு 0773512940

## சிறுநீரகம் தேவை

ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு உடல் ஆரோக்கியமான ஒருவரின் $B^-$ or $O^-$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. வழங்கி உதவுப வர்கள் உடனடியாகத் தொடர்பு கொள் ளவும். 0771626876, 0775219961

## கல்வி

Land phone திருத்துவதற்கான பாடநெறி (Mobile phone advanced Reparing diploma) Software and hardware course இனை கற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். பயிற்சியின் பின் நல்ல salary உடன் வேலை பெற்றுத் தரப்படும்.தொடர்பு: 0778583102, 0777078577

## ஹயஸ் வான் விற்பனைக்கு

254-xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள ஹயஸ் வான் விற்பனைக்குண்டு. இடம் கச்சேரிக் குப் பக்கத்தில்.

தொடர்பு: 0773144850

## மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ 34 வயது (M.Sc qualification) திருவோணம் 2இல் செவ்வாய் London work permit உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: bcathasan@yahoo.com 0776681912


## கடை வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சத் திரச் சந்திக்கும், கஸ்தூரியார் வீதிக் கும் இடையில் கடை ஒன்று வாட கைக்கு உண்டு.

தொடர்பு: 0778407577

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி தங்கையா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், 1ஆவது நாவலடி ஒழுங்கை, மானிப் பாயை வதிவிடமாகவும் கொண்ட சின் னத்தம்பி தங்கையா 16.12.2011 வெள் ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன் -மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் கெங்காலட்சுமியின் அன்புக் கணவரும், சுஜாதா, சுஜீவன் (கொலன்), காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் கிர்த்திகா (கீர்த்தா), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அரசு (றெஜி), சஜிவனி, ஞானச்சந்திரன் (கனடா), கிருசாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாம னும், பபித்திரா, சுலக்சன், கௌசிகா, டிலக்சிகா, டிலக்சன், ஆகாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்ற விஜ யரட்ணம் மற்றும் பவானி, பராசக்தி, அதிரூபராணி, சற்சொரூபி, காலஞ்சென்ற சிவயோகநாதன் மற்றும் புவனேந்திரகுமார், சிவசரணதேவி, றவிசாந்தினி ஆகியோரின் மைத்துனரும், தாரணி, பிரதீப், முகுந்தன், ராகுலா, சாலோம் ஆகியோரின் மாமனும், மயூரன், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் கௌதமன், கௌதம், றஜீவன், லக்சி, சாம்பவி, ராம்குமார், ரசிக்கா, ஐங்கரன், ஆர்த்தி, பிரகாஸ், கஸ்தூரி ஆகியோரின் பெரிய தந்தையும், சந்திரா, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், மற்றும் நேசராஜா, சிவநாதன், கிருஷ்ணதாசன், சுகிர்தா, வசந்தி, ரட்ணராஜா, செல்வரட்ணம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணி அளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப் பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாவது நாவலடி லேன்,
மானிப்பாய். (11793)(6-7-8)

தகவல்:
றெஜி (மருமகன்)

---

நயினை

ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரின்

# ஆற்றொணாத் துயர் பகிர்வு



## சி.பொ.இராசரத்தினம்

அவர்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணிஅமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்பகாலத் தொண்டரும், தர்மகர்த்தா சபையின் சிரேஸ்ட உறுப்பினரும் முன்னாள் இடைக்காலப் பொதுச் செயலாளரும் சிறந்த சமய சமூகத் தொண்டருமாகிய சி.பொ.இராசரத்தினம் (சவாரித்தம்பர்) அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது சபையினரின் ஈரவிழி சுமந்த கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் , குடும்பத் தாருடன் எமது துயர்தனைப் பகிர்ந்து கொள்கின்றோம். அமரரின் ஆத்ம சாந்திக்காக அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் பாதார விந்தங்களை இறைஞ்சுகின்றோம்.

நிர்வாகம்,
அமுதசுரபி அன்னதான சபை,
நயினாதீவு.

தொ .இல.
021 3213575 (சி/6943)(3.6.9)

---

# சாய் சங்கீதா



42,500/= Upwards | 5,250/= Upwards | 5,950/= Upwards | 4,750/= Upwards

இசைக்கருவிகள் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

U.G. 53, பீப்பிள்ஸ் பார்க், காஸ் வேக்ஸ் வீதி, கொழும்பு - 11.

**Tel : 011 2384222 / 2445102**

---

## பணிப்பெண் தேவை

ஒவ்வொரு நாளும் வந்து போய் வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. சம்பளம் : ரூபா 350/= (ஒரு நாளுக்கு)

தொடர்பு: 0217900637

## வீடு தேவை

சுன்னாகம் தொடக்கம் கோண்டாவில் வரை K.K.S வீதியில் அல்லது கிட்டிய தூரத்தில் வீடு வாடகைக்குத் தேவை. மாதாந்தம் ரூ.10,000/= (பத்தாயிரம்) வாடகை தரப்படும். இணுவில் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0770440570,0771393670

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சமையல், வீட்டுவேலைகள் செய்வதற்கு பணிப்பெண் உடன் தேவை. சம்பளம் ரூபா 9000/= இற்கு மேல் வழங்கப்படும். தங்கியிருந்து அல்லது காலை வந்து மாலை வீடு சென்று வேலை செய்யலாம்.
A.G. செல்வம், 107, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம். தொடர்பு: 0779107153

## வீடு வாடகைக்கு தேவை

அரச தொழில் புரியும் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை. $1^1/_4$ - $1^1/_2$ பரப்பு காணி விலைக்குத் தேவை.
தொடர்பு: 0777272582/0776589565.

## உதவியாளர் தேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் கௌரவமான தமிழ் குடும்பத்துடன் தங்கியிருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு 35 - 45 வயதுக்கிடைப் பட்ட பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0750781181

## கார் விற்பனைக்கு

12 Sri xxxx தொடரிலக்கமுடைய மிற்சுபிசி லான்சர் கார் விற்பனைக் குண்டு தொடர்பு:-0777941089

## வாடகைக்கு

யாழ்.நகரில், பிரபல வங்கிகளுக்கு அருகில், வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களுக்குப் பொருத்தமான கடைக்கட்டடம் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0750496867.

## காணி விற்பனைக்கு

யாழ். நகரை அண்மித்து, வேம்படி பெண்கள் மற்றும் மத்திய கல்லூரிகளுக்கு சமீபமாக, வேம்படி வீதியில் கடை, கந்தோர், workshop, அல்லது வீடு கட்டுவதற்கு ஏற்ற இரு வீதிகளை முகப்பாகக் கொண்டு, கிணற்றுடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விவரங்கட்கு: 0772172163/0773561991

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

குடும்பத்தின் ஒளி விளக்காய்

திருமதி **சரஸ்வதி பியதாஸ**

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், தொலைத்தொடர்புத் திணைக்களம்)

திதி. அட்டமி 18.12.2011



ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம்
காண நித்தம் நித்தம்
ஏங்கித் தவிக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்
E.S. பியதாஸ (கணவர்),
றூபினி (மகள்),
வரதராஜா (மருமகன்-குஞ்சன்),
பேரப்பிள்ளைகள் : அபிநயா, திவ்யா

132, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்

(11798)(6,7,8)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் அபிவிருத்தி இணைப்பாளராக கடமையாற்றும்
திருமதி குலரஞ்சினி சாந்தகுமார் அவர்களின் தாய்

## திருமதி பாக்கியம் தர்மலிங்கம்

அவர்கள் 16.12.2011 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
மாவட்ட திட்டமிடல் செயலகம்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (11795) (6,7,10)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 7.11.2011 அன்று உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெற்ற

செல்வன்
**சச்சிதானந்தன் தமிழன்பன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன் மேலும் பல சிறப்புக்களைப் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சுதாச் சித்தி, சித்தப்பா,
சாஹித்யன், சானுஜன்.

(11789) (2-6-7)

---

# STUDY IN UK

உங்கள் எதிர்கால கனவுகளை நிஜமாக்கிட இன்றே விரையுங்கள்

**JAN/FEB INTAKE**

- நீங்கள் G.C.E O/L or G.C.E A/L அடிப்படை தகுதியுள்ளவராயின் (U.K) இல் உயர் கல்வியினை தொடர்வதற்கான சிறந்த ஆலோசனை
- மிகக்குறைந்த செலவில் Student Visa பெற்றுக்கொள்ள அனைத்து ஆலோசனைகளும் மிகக் கண்ணியமான முறையில் வழங்கப்படும்.
- Own Sponsor உள்ளவர்கள் செலவினை குறைக்கலாம்.

PS CONSULTING
No.19 A, STATION ROAD,
KONDAVIL WEST,KONDAVIL, JAFFNA.
T.P. 0778328290, 0755766786

(11731)(6.7)

---

# வாழ்க நாயகனே....



யாழ்.பல்கலைக்கழக
பராமரிப்புப் பகுதியிலே
25 அகவைகள்
எந்திரவியலாளராகக் கடமையாற்றி,
அரும் சேவை புரிந்து
இன்று 18.12.2011
ஓய்வு பெறும்

**சின்னத்துரை தயாபரன்**

அவர்களை இதயம் நிறைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.பல்கலைக்கழக
பராமரிப்புப் பகுதியினர்.

(11781) (2-6-7)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைப்பீடம்
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்

**Media Resource Training Center (MRTC)**

இதழியல் டிப்ளோமா (முழுநேரம்-இரண்டு ஆண்டுகள்)
கல்வியாண்டு-2012/2014
**Diploma in Journalism-2012/2014**

*புதிய கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டாண்டு பயிற்சி நெறிக்கான, 2012/2014 ஆண்டுக்கான, புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.
விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

பயிற்சி வழங்கப்படும் துறைகள்
- அச்சு ஊடகம்
- இலத்திரனியல் ஊடகம்
- இணைய ஊடகம்

பயிற்சிக் காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்
- செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
- றேடியோ மற்றும் ரி.வி. நிகழ்ச்சிகள் தயாரித்தல்
- ஊடக நிறுவனங்களில் செயல் முறைப்பயிற்சி
- சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப்பயிற்சிகள்
- ஆவணப்படத்தயாரிப்பு

அனுமதிக்கான தெரிவு முறை: எழுத்துத் தேர்வும் (எழுத்து ஆற்றல், அறிக்கையிடும் திறன், மொழியாற்றல், சமூக அறிவு) நேர்முகத்தேர்வும்.

கற்கை நெறிக்காலம்: 2 ஆண்டுகள் (முழுநேரம்)

கட்டணங்கள்:

| | |
|---|---|
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா 20,000.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 750.00 |
| நூலக வைப்புப்பணம் (மீளளிக்கத்தக்கது) | ரூபா 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா 1,000.00 |
| மொத்தம் | ரூபா 22,500.00 |


**விண்ணப்பப் படிவங்கள்:** விண்ணப்பப்படிவங்களை "இல.84, ஜும்மா பள்ளி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரியில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூபா 100/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 31.12.2011.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு தொலைபேசி இலக்கம்: **0212229873**

பதிவாளர்.
*14.12.2011*


# ஓராண்டு நினைவஞ்சலி



ஈழ மண்ணில்
28.01.1960

டென்மார்க் மண்ணில்
28.12.2010

அமரர் **கந்தையா தனபாலசிங்கம்**

திதி:18.12.2011 அட்டமி

## எம்மை விட்டு மறந்ததென்ன நாம் செய்த பாவம்

*தினம் தினம் தான் போய் வருவாய் அப்பா - இந்தத்*
*தினம் வரையில் காணவில்லை எங்கு சென்றாய் அப்பா*
*மனம் பதைத்து வாடுகின்றோம் அப்பா- எங்கள்*
*மனம் குளிர எம்முன்னே வந்திடாயோ அப்பா*

*பாய் போட்டுத் தூங்க வைத்த பாசமுள்ள அப்பா - எங்கள்*
*தாய் கலங்க நாம் துடிக்க போனதெங்கே அப்பா*
*தாய்ப் பசுவைத் தேடி அழும் கன்று - உன்*
*சேய்கள் உனைக்காணாது வாடுதப்பா இன்று*

*காலையிலே கண் விழித்தால் நான் காணும் காட்சி- உனை*
*காலமெல்லாம் பார்த்திருப்பேன் என்பதற்குச் சாட்சி*
*மாலை இட்ட மங்கை அவள் மாறாத சோகம் - இந்த*
*மாலைக்குள் வந்திடாரோ என்று நிதம் ஏங்கும்*

*தாய் மண்ணில் தாய் மொழியில் உன் தணியாத தாகம் - பெற்ற*
*தாய் தன்னில் கொண்டிருந்த பாசத்துக்கு ஈடாம்*
*உன் விடுதலை வேட்கை தன்னை விவரிக்கப்போனால்*
*என் வாய் மொழியில் வார்த்தை இல்லை எனை வசைபாடவேண்டாம்*

*நாடு விட்டு நாடு சென்று நாள்கள் பல சென்றும் - உறவை*
*நாடுகின்ற உன் இதயம் பாடும் அவர் கீதம்*
*கேடு கெட்ட மானிடர்கள் அப்பா- அதனால்*
*வீடு விட்டுச் சென்றனையோ விளம்புவாயோ ஒருக்கால்*
*தூய ஒளி பரப்பும் உங்கள் இருவிழிகள் நெஞ்சில்*
*பாய இருள் விலகும், கறை அகலும்*
*என்றுமே தூங்காத உன்புனித இதயம் - இன்று*
*எம்மை விட்டு மறந்ததென்ன நாம் செய்த பாவம் ?*

**விளையாட்டரங்கு வீதி,**
**கட்டப்பிராய்.**

(11736)(3.6.9)

**பாலசுப்பிரமணியம்**
**குடும்பம்.**


ej;jhh; gz;bifia Kd;dpl;L... mjpub tpi

**LAPTOP COMPUTERS**
**DESKTOP COMPUTERS**

**HP - 430**
- Intel Core i5 2430 2.4 GHz
- 2GB DDR-III
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam Wi-Fi
- Dos /1Year Warranty

**Price :- Rs. 66,200/=**

**HP - 630**
- Intel Core i3 2330 2.2 GHz
- 2GB DDR-III
- 320 GB SATA HDD
- DVD Writer
- 15.6" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos /1Year Warranty

**Price :- Rs. 62,000/=**

**HP - Probook4530s**
- Intel Core i3 M380 2.53 GHz
- 4GB DDR-III
- 320GB SATA HDD
- DVD Writer / Finger Print
- 15.6" LE D wide Screen
- Wi-Fi /Webcam /BT
- Home Primum /1Year Warrnty

**Price :- Rs. 69,400/=**

- Intel Dual Core 3.0 GHz
- M/Board - Biostar G41
- 2GB DDR-III Kingston
- HDD 500GB Samsung
- Casing Tower ATX
- DVD Writer Samsung
- Monitor LED 15.6" Viewsonic
- USB Keyboard Board
- USB Optical Mouse with pad
- M/M HI-FI Stero Speaker

**System - I @ 41,750/=**

**Gigabyte - E1425a**
- Intel Core i5 480 2.67 GHz
- 3GB DDRIII./ 512MBVGA
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos / 2 Years Warrnty

**Price :- Rs. 62,500/=**

**Acer - Aspire 4749**
- Intel Dual Core B950 2.1 GHz
- 2GB DDR-III
- 500 GB SATA HDD
- DVD Writer
- 14.1" High Definition LED
- Wi-Fi /Webcam
- Dos / 1Year Warrnty

**Price :- Rs. 49,700/=**

**Acer - Aspire 5750**
- Intel Core i3 2310 2.1 GHz
- 3GB DDR-III
- 320GB SATA HDD
- DVD Writer
- 15.6" LED wide Screen
- Wi-Fi /Webcam /BT
- Home Primum /1Year Warrnty

**Price :- Rs. 63,300/=**

- Intel Core i3 3.0GHz
- M/ Board-Biostar H61
- 2 GB DDR-III Kingston
- HDD 500GB Samsung
- Casing Tower ATX
- DVD Writer Samsung
- Monitor LED 19" Viewsonic
- USB Keyboard Board
- USB Optical Mouse with pad
- M/M HI-FI Stero Speaker

**System - II @ 51,750/=**

★1- 3 tUl tiuaWf;fg;gl;l cj;juthjk;!
★ifapUg;gpy; cs;stiu kl;LNk...

**Free:**- *Headphone w/mic,M/M Speaker ,Mouse*

*Note:-* **First 25 Customers**

*SDS Computer Services*
*No. 42/1, College Road, Jaffna.*
J/Hindu College ikjhdj;Jf;F mUfhikapy;....
*T/P:- 021-5100105,0777-874705 , Fax:- 021222-4500*

*Our Services*
*Sales, Repair & Maintenance, Software Developments ,all type of Security Systems and etc.....*

**Kaspersky 2012**


@ 1,400/=

**Windows 7**


@ 6,200/=

**Dongle-Multi**

@ 4,000/=

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
08.08.1938

இறப்பு
20.11.2011

(11692)(2-6-7)

20.11.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

# அமரர் கந்தையா பரமநாதன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியதுடன் இறுதிக் கிரியை வரை எம்முடன் கூடவே நின்று உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு வெளியிடங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலமும் தொலைநகல், மின்னஞ்சல், இணையம் ஆகியவற்றினூடாகவும் அனுதாபச் செய்திகளை வழங்கியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வழங்கியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின் போது கிரியைகளைச் செய்த குருமார்களுக்கும், அஞ்சலியுரைகளை ஆற்றிய நிறுவனத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் நாளை மறுதினம் (20.12.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் நடைபெற இருப்பதால் அனைத்து உள்ளங்களையும் வீட்டுக்கிரியைகளில் பங்குபற்றுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.22,பாலிநகர், வவுனிக்குளம் - குடும்பத்தினர்.

**PASUPATHY NATURAL MEDICAL CENTRE - KAITHADY**

நவீன மருத்துவ அறிவுடன் சித்த, ஆயுள்வேத சிகிச்சைகளும், ஆலோசனைகளும் இல்லம் வந்து வழங்க தயாராகவுள்ளோம்.

**எங்கள் விசேட சேவைகள் யாருக்கெல்லாம்?**

1. நடக்க அவதிப்படும் பாரிசவாத நோயாளி
2. வேதனையில் துடிக்கும் முடக்கு, மூட்டு வாத நோயாளி
3. கை, கால் விறைப்பு, அடிபட்ட வலி

**Physiotherapy, Oil massage therapy, Internal Medication** | **T.P. No. 0213201636 Hot line: 0771739081**

**Dr. S.P. Thavakeethan, B.S.M.S. (SL), Dip.In.HRts. Reg.No. 12781**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
30 . 04 . 1941



மறைவு
19 . 11 . 2011

## அமரர் கதிரித்தம்பி வன்னியசிங்கம்

கடந்த 19.11.2011 சனிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியை நாளை (19.12.2011) திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கோப்பாய்) நடைபெறும்.அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.235,
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (11712)(3.6.7)

தகவல்:
சகோதரர்கள்.

## தவறிவிட்டது

இல.03 செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியினை உடைய சுப்பிரமணியம் சிவராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (442872473V) மற் றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 10.12.2011 சனிக்கிழமை யாழ்ப்பாணத் திற்கும் நல்லூருக்கும் இடையில் தவிறிவிட்டது. இதனைக் கண்டெடுத்த வர்கள் 0757610237 உடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## முதியோர் இல்லம்

''யாழில் முதியோர் இல்லம்'' திருநெல்வேலி Central nursing homeஉடன் இணைந்து முதியோர், நோயாளர் யாழ் நகரிலும் பராமரிக் கப்படுகின்றர். கிளைகள் வெள்ள வத்தையிலும்உண்டு.தொடர்பு:0718234691,0752555689

## கடைக்கு வேலையாள்கள் தேவை

**சிறி கண்ணன் ஸ்டோர்**
No.1 பலாலி வீதி,
திருநெல்வேலி.

1. சிட்டை எழுதுநர் (பெண்பிள்ளை)
2. விற்பனையாளர்(ஆண்)

தொடர்புகளுக்கு: 0777769231

Note : திருநெல்வேலி சுற்றாடலில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

## விற்பனைக்கு

கடைக்குத் தேவைக்கான கண் ணாடி அலுமாரி விற்பனைக்கு உண்டு. நீளம் 12‘, உயரம் 7’, அக லம் 1’. தொடர்புகளுக்கு : 0776798676

## வீடு வாடகைக்கு

யாழ் பிறஸ்வீதியில் ஆயர் இல்லத்திற்கு பின்புறமாக எல்லா வசதிகளும் கொண்ட வீடு தை மாதத்தில் இருந்து வாடகைக்கு விடப்படும். அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0778981296

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1975 விசாகம், 1980 மகம் பிரபல தொழில திபருக்கு மணமகள் தேவை, சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: வாணி, 0774494764, 0778501013

## CEYMED HOSPITAL SERVICES (PVT) Ltd.
## பதவி வெற்றிடங்கள்

1. மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் : (MLT) பயிலுநர்கள் (Trinee MLT) (க.பொ.த.உ/த (G.C.E A/L) விஞ்ஞான பாடங்கள், அனுபவமுள்ள பயிலுநர்கள், கணினி அறிவு விரும்பத்தக்கது.

02. உதவியாள்கள் : வயதெல்லை 20-35
சாரதி அனுமதிப்பத்திரம்

Forward Your CV to
thayakaran@ceymed.lk
Branch Manager,
No: 514 , Hospital Road, Jaffna.T.P. 0714535258,0214641641.

(11779) (3-67)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

அமரர் **வல்லிபுரம் கணபதிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/நெ.ம.மா.வித்தியாலயம்)

தோற்றம்:
14 — 8 — 1940



மறைவு:
18 — 11 — 2011

கடந்த 18.11.2011 அன்று இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் நோயுற்ற நேரத்தில் நேரில் பார்த்து உதவி செய்தவர்களுக்கும், அன்னாரின் உதிர்வு கேட்டு உடன் வருகைதந்து எமை தேற்றிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிக் கிரியையின் போது மலர் வளையம், மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், தொலைபேசி, தொலைநகல் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் இன்று வரை பல வகை உதவிகள் செய்தோருக்கும், எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''பார்வதி பூங்கா'',
அல்வாய் வடமேற்கு,
திக்கம்.

மனைவி, பிள்ளைகள்:
முகுந்தன், சுகந்தன், ஜெயந்தன்,
நிரோஜன், நிதர்ஷன், நிமலன்.

# JAFFNA ELECTRICALS

ஆரம்பம் 1969

LG நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவும் இலவச மின் உபகரணங்களும்

**10.12.2011 முதல் 31.12.2011 வரை**

மின்சார இலத்திரனியல்,மற்றும் மின்னிணைப்பு பொருட்களுக்கு 10%தொடக்கம் 30% வரையிலான விலைக்கழிவு.

சகல விதமான மின்சார இலத்திரனியல் உபகரணப்பொருள்கள் PVC நீர்க்குழாய்கள்,நீர்ப்பம்பிகள் முதலியன மிகக் கூடிய விலைக்கழிவுடனும் இலவச விநியோக சேவையுடனும் பெற்றுக்கொள்ளலாம்.




No : 94(6) Stanley Road.Jaffna.
Tel : 021 222 2353
Fax : 021 222 4302

EMail :- jaffnaelectricals@yhaoo.com
Web :- www.jaffnaelectricals.com


Authorized Dealer for
**Abans**

உதயன்
18 டிசெம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

# வாலைச் சுருட்டின இலங்கையின் சிங்கங்கள்

**தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி இன்னிங்ஸாலும் 81 ஒட்டங்களாலும் படுதோல்வியைத் தழுவிக் கொண்டது. இலங்கையின் முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் எவரும் சாதிக்காத நிலையில் தென்னாபிரிக்காவின் பிளென்டர் இரண்டாவது இன்னிங்ஸிலும் அசத்த ஆபிரிக்க அணி சொந்த மண்ணில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. இந்த வெற்றி மூலம் தென்னாபிரிக்க அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.**

''ஆறு மனமே ஆறு... ஆறு ரன்னே போதும்.....''



இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழந்து வெளியேறுகிறார் திலகரட்ண டில்ஷான். அணித்தலைவர் டில்ஷான் இரண்டு இன்னிங்ஸிலும் தலா ஆறு ஒட்டங்களைப் பெற்றார்.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் செஞ்சூரியனில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பிளென்டர், ஸ்ரெயின் வேகத்தில் 180 ஒட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக மத்தியூஸ் 38, சமரவீர 36, பரணவிதாரன 32, மஹேல 30 ஒட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பிளென்டர் 5, ஸ்ரெய்ன் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக் அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 9 இலக்கு நஷ்டத்துக்கு 389 ஒட்டங்களைப் பெற்றது. களத்தில் பௌச்சர் 49, இம்ரான் தகீர் 24 ஒட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக டீ வில்லியரஸ் 99, ஸ்மித் 61 ஒட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானதும் 49 ஒட்டங்களுடன் களத்திலிருந்த பௌச்சர் ஆட்டத்தின் முதலாவது பந்திலேயே நான்கு ஒட்டம் விளாசி 35 ஆவது சர்வதேச அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய தகீரும் சிறப்பான ஒத்துழைப்புக் கொடுக்க பத்தாவது இலக்குக்காக 50 ஒட்டங்கள் பகிரப்பட்டது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 411 ஒட்டங்களைப் பெற்ற நிலையில் பத்தாவது இலக்கை இழந்தது. பௌச்சர் 65, தகீர் ஆட்டமிழக்காமல் 29 ஒட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் வெலகெதர, திஸ்ஸர பெரேரா தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

''ஓடினேன் ஓடினேன் பவிலியன் எல்லை வரை ஓடினேன்''



இரண்டாவது இன்னிங்ஸில் 'ரன் அவுட்' ஆகி வெளியேறினார் மஹேல ஜெயவர்தன.

231 ஒட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது இலங்கை அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பரணவிதாரன, அணித்தலைவர் டில்ஷான் களமிறங்கினர். ஸ்ரெயின் முதலாவது பந்திலேயே எல்.பி.டபிள்யூக்கான முறைப்பாடு செய்தபோதும் அது கிட்டவில்லை. மறு முனையில் பந்து வீசிய பிளென்டரும் இலங்கை அச்சுறுத்தும் வகையில் பந்து வீசினார்.

இலங்கை அணி 11 ஒட்டங்களை எட்டிய நிலையில் டில்ஷான் 6 ஒட்டங்களுடன் ஸ்ரெயினின் பந்து வீச்சில் பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பரணவிதாரன 4, சங்ககார 2 ஒட்டங்களுடன் வெளியேற இலங்கை 19 ஒட்டங்களுக்குள் மூன்று இலக்குகளை இழந்திருந்தது. அதன்பின்பு இணைந்த மஹேல, சமரவீர ஜோடி சற்று ஆறுதலளிக்கும் வகையில் நிதானமாய் நின்றாடியது. மெதுவாக நான்காவது இலக்குக்கு இணைப்பாட்டம் கட்டியெழுப்பப்படுகையில் மஹேல 15 ஒட்டங்களுடன் 'ரன் அவுட்டில்' ஆட்டமிழந்தார். இலங்கை அணியின் நான்காவது இலக்கு 37 ஒட்டங்களைப் பெற்ற நிலையில் சரிக்கப்பட்டது. மத்தியூஸ் நுழைந்து நிதானமாக ஆட மறுமுனையில் சமரவீர ஒட்டக் குவிப்பில் ஈடுபட்டார். இவர்களது சிறப்பான இணைப்பின் மூலம் இலங்கை அணி 50 ஒட்டங்களை தாண்டியது.

ஐந்தாவது இலக்குக்காக 29 ஒட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் மத்தியூஸ் 5 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து அணி 70 ஒட்டங்களைப் பெற்றபோது சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த சமரவீர 32 ஒட்டங்களுடன் மோர்கலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற இலங்கையின் ஆறாவது இலக்கும் சரிக்கப்பட்டது.

அதன் பின்கு ஜோடி சேர்ந்த கௌசல்ய சில்வா, திஸ்ஸர பெரேரா இருவரும் கடுமையாகப் போராடி இலங்கையின் ஒட்ட எண்ணிக்கையை நூறைத் தாண்ட வைத்தனர். மெதுவாக சிறப்பான இணைப்பாட்டத்தை இந்த ஜோடி ஏற்படுத்திய போதும் ஸ்ரெயின் தாக்குதலில் உடைத்தெறியப்பட்டது. 7 ஆவது இலக்குக்காக 34 ஒட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பெரேரா 21 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹேரத் வந்த வேகத்திலேயே அதிரடியாக ஒட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார். இருப்பினும் மறுமுனையில் சில்வா நிதான ஆட்டத்தையே தொடர்ந்தார். எட்டாவது இலக்குக்காக 29 ஒட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் நிதானமாக ஆடிய சில்வா 17 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சில்வாவைத் தொடர்ந்து களம்புகுந்த வெலகெதர, பிளென்டரின் பந்து பரிமாற்றத்தில் அதிரடியாக ஆறு, நான்கு ஒட்டங்கள் விளாசினார்.


''சம்பளத்தை தா... பந்தை அடிக்கிறேன்...''




தென்னாபிரிக்க வேகப் பந்தை சமாளிக்கத் திணறும் திலான் சமரவீர.

இறுதிப் பந்தில் 10 ஒட்டங்களுடன் வெலகெதர வெளியேற இலங்கையின் ஒன்பதாவது இலக்கு 145 ஒட்டங்களைப் பெற்ற நிலையில் வீழ்ந்தது. இறுதித் துடுப்பாட்ட வீரராக நுழைந்த பெர்னான்டோ 4 ஒட்டங்கள் விளாசி அணியின் ஒட்ட எண்ணிக்கையை 150 எட்டச் செய்தார். இருப்பினும் மறுமுனையில் அதிரடியாக ஆடிய ஹேரத் அடுத்த பந்து வீச்சிலேயே ஆட்டமிழக்க இலங்கை அணியின் ஆட்டம் 150 ஒட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. ஹேரத் 18 பந்துகளில் 2 ஆறு ஒட்டங்கள், 2 நான்கு ஒட்டங்கள் அடங்கலாக 23 ஒட்டங்களையும், பெர்னான்டோ 4 ஒட்டங்களை ஆட்டமிழக்காமலும் பெற்றனர். பந்து வீச்சில் பிளென்டர் 5, ஸ்ரெய்ன் 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்காவின் பிளென்டர் தெரிவானார். (15)

''நாயகன் நானே....''



ஆட்டநாயகன் விருதுபெற்ற தென்னாபிரிக்காவின் பிளென்டர்.

# பாகிஸ்தானுக்கு சவால் விடும் பங்களாதேஷ்

முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் நவீஸ், சகிப் அல் ஹசன் இணைப்பின் மூலம் 234 ஒட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்துள்ளது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரில் முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மிர்பூரில் நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.



சதம் கடந்தும் சளைக்காமல் சகிப் அல் ஹசன்

அதற்கமைய பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் ரமிம் இக்பால், நஷிம் முதீன் களமிறங்கினர். ஒட்டமெதனையும் பெறாத நிலையிலேயே முதலாவது இலக்கு வீழ்த்தப்பட்டது. நஷிம் முதீன், ஷீமாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நவீஸ் களம்புகுந்தார். அணி 16 ஒட்டங்களைப் பெற்ற நிலையில் ரமிம் இக்பால் 14 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த மகமதுல்லா ஒட்டமெதனையும் பெறாத நிலையில் முதலாவது பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேற பங்களா தேஷ் அணி 21 ஒட்டங்களுக்கு மூன்று இலக்குகளை இழந்தது.

அதன் பின்பு இணைந்த நாஷிர் ஹூஸைன், நவீஸுடன் ஜோடி சேர்ந்து சிறப்பான அடித்தளத்தை அமைக்க முயன்றார். நீண்ட நேரம் இவர்களது இணைப்பு நீடிக்கவில்லை. அணி 43 ஒட்டங்களைப் பெற்ற நிலையில் நாஷிர் ஹூஸைன் 7 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் அணி திணறிக் கொண்டிருந்த நிலையில் களம் புகுந்த முன்னாள் அணித்தலைவர் சகிப் அல் ஹசன், நவீஸுடன் இணைந்தார். இதன் பின்னர் பாகிஸ்தானுக்கு ஜென்ம சனி பிடித்தது. இலகுவாக பங்களாதேஷை அடக்க நினைத்த பாகிஸ்தானுக்கு பேரிடி கொடுத்தது இந்த ஜோடி. நிதானமாக ஆடி அணியின் ஒட்ட எண்ணிக்கையை நூறைத்தாண்ட வைத்தது.

பாகிஸ்தானின் சகலவிதமான மாஜா ஜாலமும் இந்த ஜோடியிடம் தோற்றுப் போனது. பங்களாதேஷ் மெதுவாக 200 ஒட்டங்களைத் தாண்டியது. 180 ஒட்டங்களை ஐந்தாவது இலக்குக்காக இணைப்பாட்டமாகப் பகிர்ந்த நிலையில் நவீஸ் துரதிர்ஷ்டவசமாக 97 ஒட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இருப்பினும் மறுமுனையில் அசத்திய சகிப் தனது முதலாவது டெஸ்ட் சதத்தை கடந்தார்.

இறுதியில் நேற்றைய ஆட்டநேர நிறைவில் பங்களாதேஷ் அணி 68 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 234 ஒட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் சகிப் 108, முஷ்பிகுர் ர்கிம் 5 ஒட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். (15)

# ஆண்டின் கௌரவ விருது யாருக்கு? முன்னணி வீரர்களிடையே கடும் போட்டி


உசைன்போல்ட்


நோவாக் டிகோவிச்


கடேல் எவன்ஸ்


லயனல் மேசி


டிர்க் நோவிட்கி


செபஸ்டியன் வெட்டல்

2012ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள உலக விளையாட்டு கௌரவ விருது பெறும் வீரர்களைத் தெரிவுசெய்வதற்காகப் பரிந்துரைக்கப்பட்டோருக்கான பட்டியலில் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீரரான உசைன் போல்ட், ஆர்ஜென்ரீனாவின் உதைபந்தாட்ட வீரரான லயனல் மேசி, செர்பியாவின் டென்னிஸ் வீரரான டிகோவிக் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இந்த விருதுக்கான அணிகள் வரிசையில், டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தமைக்காக இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விருதுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட விவரங்கள் தனித்தனிப் பிரிவாக வருமாறு:-

**ஆண்டின் சிறந்த வீரர் விருது-**

* உசைன்போல்ட் (ஜமைக்கா) - தடகளம்.
* நோவாக் டிகோவிக் (செர்பியா)-டென்னிஸ்.
* கடேல் எவன்ஸ் (ஆஸி.) - சைக்கிள் ஓட்டம்
* லயனல் மேசி (ஆர்ஜென்ரீனா)-உதைபந்தாட்டம்
* டிர்க் நோவிட்கி (ஜேர்மன்)-கூடைப்பந்தாட்டம்
* செபஸ்டியன் வெட்டல் (ஜேர்மன்)-மோட்டார் ஓட்டம்

**ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது-**

* விவியன் ஷெரியோட் (கென்யா)-தடகளம்
* மரியா ஹொவ்ல் (ஜேர்மன்)-அல்பின் பனிச்சறுக்கல்
* கர்மேலிரா ஜெரெர் (அமெரிக்கா)-தடகளம்
* பெட்ரா கிவிடோவா (செக் குடியரசு)-டென்னிஸ்
* ஹோமர் சாவா (ஜப்பான்)-உதைபந்தாட்டம்
* யானி ரிசெங் (தாய்வான்) - கோல்வ்

**ஆண்டின் சிறந்த அணிக்கான விருது**

* ஒல் பிளாக்ஸ் (நியூஸிலாந்து)-றக்பி
* பார்சிலோனா(ஸ்பெய்ன்) - உதைபந்தாட்டம்
* டால்ஸ் மவெரிக்ஸ் (அமெரிக்கா)-கூடைப்பந்து
* இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட் அணி
* ஜப்பான் பெண்கள் உதைபந்தாட்ட அணி
* ரெட்புல் (ஆஸி.) - மோட்டார் போட்டி.


அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்காக முல்லைத்தீவு அரச திணைக்களங்களுக்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வெற்றியீட்டிய மாந்தை கிழக்கு பிரதேச செயலக அணியினர். (த-23)

## அணித் தெரிவு செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,18

தேசிய மட்ட சிரேஷ்ட கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற உள்ளது. மேற்படி போட்டியில் பங்குகொள்ளவுள்ள யாழ். மாவட்ட ஆண், பெண் அணிகளுக்கு வீர, வீராங்கனைகளைத் தெரிவுசெய்யும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெறவுள்ளது. அணித் தெரிவில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உரிய நேரத்தில் சமுகம் தருமாறு யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவர் எஸ்.ரமணன் அறிவித்துள்ளார். (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அங்கத்தவர்களுக்கு இடையே நடைபெற்று வரும் மின்னொளியிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது. இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதுகிறது. (த-23)

## வெற்றிபெற்ற அணிகள்

யாழ். மாவட்ட கூடைபந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்திவரும் மின்னொளியிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் வெற்றிபெற்ற கழகங்களின் விவரம் வருமாறு:-

பற்றீசியன் விளையாட்டுக் கழக அணிக்கும் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 43:42 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றிபெற்றது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் கோப்பாய் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவுக்கும் இடை யில் ஏற்பட்ட ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட் டுக் கழக அணி 29: 28 என்ற புள்ளி அடிப்படை யில் வெற்றி பெற்றது.

கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணிக்கும் ஓல்ட் கோல்ட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டு கழக அணி 42:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. கோப்பாய் விளையாட்டுக்கழக 'பி' பிரி வுக்கும் யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி 52:10 என்ற புள்ளியடிப்படையில் வெற்றி பெற்றது.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் சென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 67:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரையப்பா பாக்கியம்

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும். இல.299, செல்வாநகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா பாக்கியம் நேற்று (17.12.2011) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் ஆனந்தநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.299, செல்வாநகர், கிளிநொச்சி. குடும்பத்தினர்.

### திருமதி நகுலேஸ்வரன் சாந்தாதேவி

நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரன் சாந்தாதேவி நேற்று (17.12.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நகுலேஸ்வரனின் (ஆசிரியர், கிளி/பளை மத்திய கல்லூரி) அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

687/25, ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வீ.நகுலேஸ்வரன் (கணவன்)

## மரண அறிவித்தல்

### செபமணி புவனேஸ்வரி



அந்திரான், சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், கல்வளை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செபமணி புவனேஸ்வரி 16.12.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு- தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், சக்தி வடிவேல், அருணாசலம் மற்றும் மணிமேகலை, பாக்கியலக்சுமி ஆகியோரின் சகோதரியும், கலாறஞ்சினி, ஜெயரஞ்சினி, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும், கீதா, திலீபன், கிருசா, சுவீற்ரா, சுலக்ஷன், கார்த்திக், அர்னிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

செபமணி புவனேஸ்வரி,
கல்வளை, சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## பணிநிலை வெற்றிடம்

(ஆண், பெண் இருபாலாரும்)

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் ரயர் விற்பனை முகவர் நிலையம் என்பவற்றுக்கு முகாமையாளர் G.C.E. O/L கணிதம், ஆங்கிலம் விசேட சித்தியுடன் G.C.E. A/L சித்தியடைந்தவர்களும்

* விற்பனைப் பிரநிதிநி- ஆங்கிலம், சிங்களம் பேசும் திறமையுடையவர்களும்
* எரிபொருள் நிரப்புநர் (பம்பர்) - G.C.E. O/L சித்தியடைந்தவர்கள்

எதிர்வரும் 19.12.2011 திங்கட்கிழமை காலை 9.30 இற்கு இல.207, கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள கதிரேசம் பிள்ளை கமலாதேவி எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.


நிர்வாகத்தினர்.

## விற்பனைக்கு

மிற்சுபிசி L-300 மொடல் (20-xxxx) இலக்கம் உடைய வான் (வெள்ளை நிறம்) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0776365990,0772544560

நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் I.லியோனி தன் குழுவினருடன் சிறப்பிக்கும்



சிரிக்க சிந்திக்க
நகைச்சுவைப் பட்டிமன்றம்

எதிர்வரும் ஜனவரி மாதம் 21ம் திகதி 2012 முதல் ஜனவரி 29ம் திகதி வரை கொழும்பு, குருநாகல் மற்றும் நாடளாவிய ரீதியில் இந்நிகழ்ச்சி நடாத்தப்படவுள்ளது.

பாடசாலைகளுக்கு விசேட சலுகை

இந்நிகழ்ச்சியை உங்கள் பிரதேசங்களிலும் நடாத்த விரும்புவோர் தொடர்புகொள்ளவும்
Ln. R. Anandaraja 0777 413374
(நிகழ்ச்சி அமைப்பாளர்)

## மரண அறிவித்தல்



### திருமதி ஆதர் பெரேரா சோமாவதி

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை வதிவிடமாகக் கொண்ட திருமதி ஆதர் பெரேரா சோமாவதி 16.12.2011 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கொத்தலாவல ஆதர் பெரேராவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெயசூரிய மற்றும் நளாயினி, ஜெயதிலக்கா (புடவை வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற நவமணி மற்றும் விஜயகுமார் (ராஜ் றீவைண்டிங்), சாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும் சுபாசினி (ஜேர்மனி), தீபன்ராஜ், பிரதீபன், நிதுஷா, தனுஷன், கேசவன், சாம்பவி, ஐங்கரபவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிஷா, யூலியன், கிரிஷான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*83/4, பருத்தித்துறை வீதி,* ஆ.ஜெயதிலக்கா *(மகன்)*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.* (189) இ.விஜயகுமார் *(மருமகன்)*

## ACCA

**Association of Chartered Certified Accountants Jaffna**

ACCA ஆனது சான்று படுத்தப்பட்ட பட்டயக்கணக்காளர் நிறுவனமாகும். மேற்படி நிறுவனம் ACCA தகைமைகளை வழங்குவதுடன் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக விசேட, அங்கீகரிக்கப்பட்ட Diploma கற்கை நெறியினை முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது. மேற்படி கற்கையினைப் பூர்த்தி செய்யும் மாணவன் வியாபாரம் மற்றும் கணக்கியலுக்கான Diploma சான்றிதழ் பெற தகுதியுடையவனாகின்றான்.



கற்கைநெறி
Diploma in Accounting & Business
(Paper based / Computer based Education & Exams)
காலம்: 6 மாதங்கள்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05.01.2012**

**நன்மைகள்:**

1. அங்கீகரிக்கப்பட்ட முதற்தர சர்வதேச Diploma சான்றிதழ். மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்.
2. க.பொ.த. (சா/த) பெறுபேற்றினைப் பெறுவதற்குரிய காலத்தினுள் பயன்பெறத்தக்க கற்கைநெறி, வேலைவாய்ப்புகள். முகாமைத்துவ துறை சார் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களின்
3. ஆலோசனைகள் / வழிகாட்டல்கள்.
4. ACCA தகைமைகளைப் பெறக்கூடிய அடிப்படை கற்கைநெறி.
5. உலகில் எங்கும் பரீட்சைக்குத் தோற்ற முடியும். கற்கைகள் யாழ்ப்பாணம், வடமராட்சியில் இடம்பெறவுள்ளது.

கற்கை வழிகாட்டல் கருத்தரங்கு:
**24.12.2011** காலை *10 மணி*

சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

Special Offer -50% Discount

*இயக்குநர்,*
*யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்,*
*பதிவு.இல:15251*
*இல.92/1, சேர் பொன்.இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
T.P.:0215670345/e-mail:jtiedu@gmail.com

## 29ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் அண்ணாமலை கந்தையாப்பிள்ளை விசுவலிங்கம்

எம் குடும்பத்தின் தீபமாய்
அயலவரின் நண்பனாய்
பண்பாலே உயர்ந்தவராய்
பாசத்தின் திருவுருவே
கணப் பொழுதில் எம்மை விட்டுப் பிரிந்தனையோ
நின் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் உன் நினைவுகளுடன்

கடந்த 20-11-2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப தீபத்தின் பிரிவுத்துயர் கேட்டு தொலைபேசி, தந்தி, மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட் டோருக்கும் நேரடியாக வந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

*புதுறோட்,* *(11740)* குடும்பத்தினர்.
*காரைநகர்*

## காங்கேயன் சாரணர் மாவட்டத்தின் பிதாமகனுக்கு சாரணர்களின் கண்ணீர்க் காணிக்கை



சாரணப் பேராசிரியர்,
சமூகஜோதி, சேவை சகோதரன்

### திரு. தம்பு நாகேந்திரம் போஜன் (ச.நீ)

உதவிப் பிரதம சாரண ஆணையாளர்
இலங்கை சாரணர் சங்கம்

(முன்னாள் வடமாகாண சாரண ஆணையாளர்,
காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர்)

எமது காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் உருவாக்கத்திலும், 30 வருட கால அதன் விழுது பரப்பிய வளர்ச்சியிலும் வேராகி நின்று தேசிய ரீதியிலும் மாவட்டத்தைத் திகழச் செய்து இன்று எம்மைவிட்டுப் பிரிந்த திரு. த.நா.போஜன் அவர்களுக்கு எமது கண்ணீர் முத்துக்களை காணிக்கையாக்குகின்றோம்.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கம்

## மரண அறிவித்தல்

### திரு. த.நா.போஜன் ச.நீ

(உதவிப் பிரதம சாரண ஆணையாளர், இலங்கை சாரணர் சங்கம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர், இலங்கை முதலுதவிச் சங்க பிரதம ஆணையாளர், ஓய்வுபெற்ற சேமநலவிருத்தி உத்தியோகத்தர், விற்பனைப் பகுதிப் பொறுப்பாளர் - காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)



கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும், இல.17, முதலியார் கனகசபை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.த.நா.போஜன் 16.12.2011 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் சீதாலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், இளவாலை வடக்கு காலஞ்சென்றவர்காளன அப்புத்துரை - வேதநாயகி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அர்த்தநாரீஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ரேணுகா, உபாசனன், சன்னுகா, பிரசன்னா மற்றும் உல்லாசனன் (ஆசிரியர், யாழ். மத்தியகல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேகா (முகாமைத்துவ உதவியாளர், வலிகாமம் வலயம்) அவர்களின் மாமனும், மாதுமையின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல.17,கனகசபை வீதி, திரு.போ.உல்லாசனன்
மானிப்பாய். (மகன்).

## மோட்டார் சைக்கிள் விற்பனை

Motor Bike For Sale
HONDA JADE 250CC (JAPAN),
NPVL XXXX FIRST OWNER
CONTACT: 0776450375

## கண்ணீர் அஞ்சலி

### தம்பு நாகேந்திரம் போஜன் J.P.



(உதவி பிரதம ஆணையாளர்
இலங்கை சாரணர் சங்கம்)

கடந்த 16.12.2011 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது சாரண ஆசான் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
*சாரணர்கள், திரிசாரணர்கள்.*

## மரண அறிவித்தல்கள்

### *கந்தையா இராமநாதன்*

(ஓய்வுபெற்ற R.D.A. உத்தியோகத்தர்)



நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா இராமநாதன் கடந்த 16.12.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி கந்தையா கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பூரணசோதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விமலாம்பிகையின் (முன்னாள் ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா ம.வி.) அன்புக் கணவரும் திருக்குமரன் (கனடா), நிரஞ்சன், தாரணி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுஜித்தா, மதுரா ஆகியோரின் அன்பு மாமனும் கமலாம்பிகை, சுப்பிரமணியம், கௌரிமலர், லோகேஸ்வரி, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சரஸ்வதி, நடராசா, சந்திரசேகரம், சந்திரஜோதி, நாகேஸ்வரன் (சிறி), காலஞ்சென்ற கிருஷானந்தன் (ஆனந்தன்) மற்றும் சிவானந்தன், அருள், காலஞ்சென்ற ராஜேஸ்வரன் மற்றும் சந்திரகுமார், நீலா, கமலா, சாந்தி, காலஞ்சென்ற ரஞ்சினி மற்றும் பவானி, சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது சகோதரன் (சுப்பிரமணியம்) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுவில் வீதி, தகவல்:
முதலாம் ஒழுங்கை சுப்பிரமணியம் (போமன்),
சாவகச்சேரி. சகோதரன்.

### *முருகர் சின்னத்தம்பி தங்கராசா*

(ஓய்வு பெற்ற பிரதம புகையிரத பாதுகாவலர்)



வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், யாழ்.கொட்டடியை வசிப்பிடமாகவும், தற்சமயம் கொழும்பில் வசித்தவருமாகிய எம்.எஸ்.தங்கராசா 13.12.2011 செவ்வாய்க்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வே.காசிநாதர் தம்பதியரின் அன்பு மருமகனும், ஓய்வு பெற்ற ஆசிரியை இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி பாக்கியம் கந்தையா அவர்களின் அன்புச் சகோதரனும், தயானி,ரஜந்தினி, ரேணுகா, மோகனவேல், தேவிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் டேவிட் துஷ்யந்தன் ரவிசங்கர் ஆகியோரின் அன்பு மாமனும், டவீனா, ஸ்ரெபானா, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், பத்மினி துரைரத்தினத்தின் உடன்பிறவாச் சகோதரனும் சுமதி, மாலதி, உதிஸ்ரா, விஷ்ணு மோகன், சுதர்சன் ஆகியோரின் அன்புக் குரியவருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.12.2011) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (19.12.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 5 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, சேன் சில்வெஸ்ரர் வீதி, தகவல் :
கல்கிசை. மனைவி, பிள்ளைகள்.

## மாபெரும் விலைச் சலுகை 12 / 12/ 2011 - 25/12/2011

10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625 /= Germany 710/= France 765/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே

இல.1 பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113

# நாடு கடந்த தமிழீழ அரசுக்கு தாலிக்கொடியை வழங்கிய தாய்!



அமெரிக்கா, டிசெ.18

நாடு கடந்த தமிழீழ அரசுக்குப் பங்களிப்பு செய்யும் முகமாக நாடாளுமன்ற சபையில் ஈழத்தாய் தனது தாலிக்கொடியைக் கழற்றி அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

நாடுகடந்ததமிழீழ அரசின்நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயப்பிரகாஷ் ஜெயலிங்கத்தின் தாயாரே தாலிக்கொடியை வழங்கியவராவார்.

அதனைத் தொடர்ந்து பல அமைச்சர்களும், மக்களும் தங்கள் பங்களிப்புக்களை நகைகளாகவும், பணமாகவும் வழங்கினர்.

இந்த நிகழ்வின் போது நாடுகடந்த தமிழீழ அரசின் கனடாப் பேராளர் ஜெயபாலன் அழகரத்தினம், தனது மனைவி மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரது அனுமதியின்றியே அவரது தாலிக்கொடியை நாடுகடந்த தமிழீழ அரசுக்கு அன்பளிப்பாக வழங்குவதாக அறிவித்தார்.

தமது தாலிக்கொடியைக் கழற்றிக்கொடுத்து முன்னுதாரணமாக விளங்கிய தமிழ்த் தாய்க்கு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரிடம், பேராளர்களும் கண்ணீர் மல்க அவர்களின் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.(ஒ-15)

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் சிங்களக் குடும்பங்களே தொழில் நிமித்தம் முகத்துவாரம் பகுதியில் தங்கியிருந்தன.

எனினும் தற்போது நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த 240 இற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் முகத்துவாரம் பகுதியில் உள்ள தமிழர்களின் காணிகளை அபகரித்து அடாத்தாகக் குடியமர்ந்துள்ளன.

அத்துடன் முகத்துவாரம் கடற்பகுதியையும் அவர்கள் முழு மையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அங்கு தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு நீர்கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளிலும் சொந்தமான வீடுகள், காணிகள் என்பன உள்ளன.

தமிழரின் நிலங்களைத் திட்டமிட்டு ஆக்கிரமிக்கும் நோக்கிலேயே இந்த மக்கள் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இது குறித்து உடனடிக் கவனம் செலுத்தி பிரச்சினைகள் ஏற்படுவதைச் சம்பந்தப்பட்டோர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தனர். (த-6)

## ஆணைக்குழுவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி ஐ.நாவின் கருத்தைக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவின் அறிக்கையை தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம். அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றிப் பரிசீலனை செய்கிறோம். அறிக்கை வெளியிடப்பட்டமை வரவேற்கத்தக்க ஒரு விடயம் என்றார். அறிக்கை தொடர்பாக, ஐ.நா பொதுச் செயலர் பான்கீமூனின் பேச் சாளர் பர்ஹான் ஹக்கிடம், இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளித்த பர் ஹான் ஹக், அறிக்கையை நன்றாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.என்று கூறியுள்ளார்.

மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கங்களை இந்த அறிக்கை கொண்டிருக்கிறதா என்பதை உறுப்பு நாடுகள் கவனிக்கும் என்று நாம் நம்புகிறோம்.

அதேவேளை பொறுப்புக் கூறுவதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## நாடாளுமன்ற.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்காலத்திலும் இப்படியான அசம்பாவிதங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் வகையில் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று சபாநாயகர் ஏற்கனவே அறிவித்திருந் தார். இதற்கமைய அமைச்சர் டி.யூ. குணசேகர தலைமையில் அமைச்சர்களான பி.தயந்தன, அநுர பிரிய தர்ஷன யாப்பா, ரவூப்ஹக்கீம் மற்றும் கருஜயசூரிய, விஜய தாசராஜபக்ஷ, இரா. சம்பந்தன் ஆகியோர் உள்ளடங்கிய நாடாளுமன்றத் தெரிவுக் குழு சபாநாயகரால் நியமிக்கப்பட்டுள்ளது. பிரதி சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அதன் விவரங்களை அறிவித்தார். (உ-02)

## கடத்தப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரர்கள் ஊர்வலம் செல்லக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் ஏ-9 வீதியின் முக்கிய சந்திகளிலும் நல்லூரிலும்கூட கலகம் அடக்குவதற்கான தயார் நிலையில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் வைத்துக் கடத்தப்பட்டனர் என்று கூறப்படும் ஜனஅறகல வியாபாரய கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் லலித் குமார வீரராஜ் மற்றும் குகன் ஆகியோரை உடனடியாக விடு தலை செய்யுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமாரவின் தலைமையில் ஆர்ப் பாட்டம் நடந்தது. தென்னி லங்கையில் இருந்தும் வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நகரில் திரண் டிருந்தனர்.

'சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று இராணுவத்தால் கடத்தப்பட்ட எமது உறுப்பினர்கள் இருவரையும் உடனடியாக விடுதலை செய்', 'வடக்கில் இடம்றெுகின்ற கடத்தல் மற்றும் கொலைகளை உடனடியாக நிறுத்து', 'மக்களின் உயிர் பாதுகாப்பை உறுதிசெய்', 'காணாமல் போனவர்களைத் தேடிக் கொடு', 'ஜனநாயகத்தை புதைத்துவிட அரசுக்கு இடம் அளிப்பதா?' ஆகிய வாசகங்கள் மும்மொழிகளில் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டம் இடம் பெறுவதனை அறிந்து நேற் றுக்காலை முதல் யாழ்.நகரப் பகுதி முழுவதும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். கலகம் ஏற்படாமல் தடுப்பதற்குரிய தயார் நிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை யாழ்.நகருக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக யாழ்.நகருக்குள் வரும் முக்கிய வீதிகளில் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுப் பொலிஸார் குவிக்கப்பட்டனர். எனினும் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் சுமார் 12.30 மணியளவில் பஸ் நிலையத்தை ஒரு வானில் வந்தடைந்தனர். உடனே நகரின் பல்வேறு பகுதியில் ஆங்காங்கே நின்றவர்கள் ஒன்றிணைந்து கோஷங்களை எழுப்ப ஆரம்பித்தனர். ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் பொலிஸாருக்கும் வாக்குவாதம் இடம்பெற்றது.

யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவாவுக்கும் ஜே.ஏ.வியின் தேசிய அமைப்பாளர் உதுல் பிரேமரட்ணவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம் பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் லலித் குமார வீரராஜ்சின் தந்தையும் கலந்துகொண்டார்.

ஆர்ப்பாட்டகாரர்கள் பயன்படுத்திய வாகனம் ஒன்றின் மீது திடீரெனக் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. (உ-14)

## காணாமற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்களான லலித் குமார, குகன் ஆகியோர் கடந்த வாரம் காணாமற்போயுள்ளனர். இதன் பின்னணியில் அரசே உள்ளது. அது எமக்கு நன்றாகத் தெரியும். எமது இயக்கத்தின் செயற்பாடுகளை அச்சுறுத்தி முடக்குவதற்கே அரசு இந்த வேலையைச் செய்தது. அது அனைவருக்கும் தெரியும். காணாமற்போன இருவரும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்கு முறைகளைக் கண்டித்துப் போராட்டங்களை முன்னெடுத்தவர்கள். தமிழ் மக்களின் உரிமைக்காக நாங்கள் குரல் கொடுப்பதை அரசு முற்றாக விரும்பவில்லை.

எனினும் நாங்கள் எதற்கும் அஞ்சமாட்டோம். காணாமற்போனோரை கண்டறியும் வரை எமது போராட்டம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடளாவிய ரீதியிலும் தொடரும் என்றார்.

ஜே.வி.பி கட்சியில் இருந்து பிரிந்து சென்று புதிய அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அஜித் குமாரவிடம் கேட்டபோது,

''இனவாதத்தை நாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை. அதை அனுமதிக்கவும் மாட்டோம். அனைத்து மக்களினதும் அரசியல் உரிமைகளுக்காக போராட வேண்டும் என்பதே எமது குறிக்கோள். எனினும் ஜே.வி.பிக்குள் உள்ள சிலர் இனவாத அரசியலையே ஆதரிக்கிறார்கள். நாங்கள் தமிழர்களுக்காக குரல் கொடுத்தால் அதனை எதிர்க்கிறார்கள். இதனை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அதனாலேயே பிரிந்து சென்றோம் என்றார். (த)

## மனித உரிமைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து ஏற்பட்ட அமைதி முறிந்து போனமைக்கான காரணங்களைக் கண்டறிந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியால் நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அது தனது அறிக்கையை கடந்த மாதம் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது. அந்த அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டது.

போரில் பொதுமக்களுக்கு இழப்புக்கள் ஏற்பட்டன என்பதை ஏற்றுக்கொண்டுள்ள இந்த அறிக்கை, அரச படையினர் வேண்டுமென்றே அந்த இழப்புக்களை ஏற்படுத்தவில்லை என்றும் விடுதலைப் புலிகளே மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி குற்றங்கள் பலவற்றைப் புரிந்தார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

ஆனால், நல்லிணக்க ஆணைக் குழுவின் இந்த அறிக்கையை மனித உரிமைக் குழுக்கள் முற்றாக நிராகரித்துள்ளன.

இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளதாவது:-

போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தவோ அல்லது குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவோ இலங் கையின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை எந்த வழி காட்டுதலையும் வழங்க வில்லை. இலங்கைப் படைகளால் புரியப் பட்ட மோசமான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ள நல்லிணக்க ஆணைக்குழு தவறி யுள்ளது. மோசமான மீறல்களில் தொடர்புடைய அரச மற்றும் இராணுவ அதிகாரிகளை பொறுப்புக் கூற வைப்பதற்கான யதார்த்தமான பாதையை நல்லிணக்க ஆணைக் குழு வழங்கத் தவறிவிட்டது. மீறல்கள் குறித்த விசாரணைகள் மற்றும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பாக ஒரு பாதையை சுட்டிக்காட்ட ஆணைக்குழு தவறியுள்ளதால், சுதந்திரமான அனைத்துலக விசாரணைக் குழு அவசியமாகிறது.

பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படக் காரணமாக இருந்த, பொதுமக்கள் செறிவாக வாழ்ந்த பகுதிகள் மீது நடத்தப்பட்ட ஆட்டிலறித் தாக்குதல்கள் குறித்து எந்தக் குற்ற விசாரணைகளுக்கும் ஆணைக்குழு அழைப்பு விட வில்லை. அத்துடன் போர்ச் சட்டங்களை மீறும் வகையில் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது கனரக ஆட்டிலறிகளைப் பயன்படுத்தியது குறித்தும் ஆணைக் குழு ஆய்வு செய்ய வில்லை.

அரச படையினர் தொடர்புபட்ட ஐந்து எறிகணைத் தாக்குதல் சம்பவங்களை மட்டும் பட்டியலிட்டுள்ள ஆணைக் குழு அவை குறித்தே மேலதிக விசாரணைகளை நடத்தக் கோரியுள்ளது. போரின் இறுதி நாள்களில் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆணைக் குழுவின் அறிக்கையில் ஆராயப்படவில்லை.

பாலியல் வன்புணர்வுகள் பற்றி அறிக்கையில் எவுமே குறிப்பிடப்படவில்லை. அத்துடன் கைதிகள் மீதான சித்திரவதை மற்றும் முறையற்றவிதத்தில் நடத்துவது குறித்தும், போரினால் இடம்பெயர்ந்த 3 இலட்சம் மக்களை பல மாதங்களாக அடைத்து வைத்தமை குறித்தும் இந்த அறிக்கையில் ஒன்றுமே கூறப்படவில்லை.

இதிலிருந்து மோதல்களுடன் தொடர்புபட்ட மீறல்களுக்கு இலங்கையினுள் ஒருபோதும் நீதி கிடைக்கப் போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது. நல்லிணக்க ஆணைக் குழுவை வைத்து இலங்கை அரசு இதுவரை ஆடிய ஆட்டம் இப்போது முடிவுக்கு வந்து விட்டது. - இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித் துள்ளது.

ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் பிரச்சினைகள் இருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஒப்புக்கொண்டுள்ளபோதும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மோசமான குற்றங்கள் குறித்த சான்றுகளையும் போர் தொடர்பான ஏனைய சட்டமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களையும் இந்த அறிக்கை அலட்சியம் செய்துள்ளது.

நாங்கள் ஏற்கனவே பயந்தது போன்று நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை பக்கச்சார்பானதாகவே அமைந்துள்ளது. இருப்பினும், ஒட்டுமொத்த மனிதஉரிமைகள் நிலைமையை முன்னேற்றுவது தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இலங்கை அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும். - இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய-பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் சாம் சரீப் தெரிவித்துள்ளார். (உ)

**பாடசாலை புதிய கல்வியாண்டு ஆரம்பத்தை முன்னிட்டு விசேட கழிவுடனான மலிவு விற்பனை**

ATLAS
அப்பியாசக் கொப்பிகள்
மிகக்குறைந்த விலையில்

TEN No.1, No.2
அப்பியாசக் கொப்பிகள்
விசேட சலுகை விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பாடநூல்கள் செயல் நூல்கள், எழுதுகருவிகள், கவரிடும் தாள்கள், கணித உப கரணப்பெட்டிகள் உட்பட பாடசாலை மாணவர் களுக்கான அனைத்து கல்விசார் உபகரணங்களையும் விசேட கழிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் இன்றே நாடவேண்டிய ஒரே இடம்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
22, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

புதிய கல்வியாண்டு ஆரம்பத்தை முன்னிட்டு எமது நிறுவனம் சனி, ஞாயிறு கிழமைகளிலும் தனது வியாபார நடவடிக்கைகளைத் தொடரும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். ரூ.2000.00 இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய கோப் பு கள் வைக்கக்கூடிய றெக்சின் கிளியர் பாக் ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

## வேலை வாய்ப்பு
### Highlight is necessay

Vedio Highlighting Editing செய்வதற்கு மூன்று (3) வருடத்துக்கு குறையாத அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு: **0756411861**

## வீடு விற்பனைக்கு

மந்திகை வைத்தியசாலையில் இருந்து 1/2 டுட் தூரத்தில், புலோலி பாடசாலைக்கு அருகில், மந்திகை கொடிகாமம் வீதியில் பத்துப் பரப்பில் அமைந்த நான்கு அறைகள் உடைய வசதியான வீடு காணியுடன் விற்பனைக்கு உண்டு. காணியைப் பிரித்தும் கொடுக்க முடியும்.

விவரங்களுக்கு: **0775916047, 0771130036**

## Personal Class (கணினி)

★ கற்கை நெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
✱ MS Office 2007/2010, Internet and E.mail, DTP, Web Design, Graphic Design சிறுவர்களுக்கான கற்கை நெறி
★ பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு- கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாக பயிற்சியளிக்கப்படும்.

ஆசிரியர்:-KRC நல்லூர்.T.P- 0779672038

## ICT, GIT வகுப்புக்கள்

தரம் 10, 11 இற்குரிய ICT தரம் 12 இற்குரிய GIT வகுப்புக்கள் தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் குழுக்களாகவும், பிரத்தியேக வகுப்புக்களாகவும் கற்பிக்கப்படும்.

186/24, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி சந்திக்குச் சமீபமாக)
தொ.பே. இல: **0776180147**

## நத்தார் விலை கழிவு + 10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிரீம் இயந்திரம்




**50,000/- மேல் மாத வருமானம்**

- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச. பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

விலை ரூ 99,000/- இல் இருந்து — புத்தம் புதியது

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

## ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி

Saamson English இனது ஆங்கிலப் பயிற்சியானது குழந்தைகள் தம் தாய் மொழியை

இலக்கணம், புத்தகம், CD எதுவுமின்றி மாணவர்களை நேரடியாக உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம், ஆங்கிலத்தில் ஒரு சொல் கூட தெரியாதவருக்கும் ஆங்கிலத்தை பழக்கப்படுத்தும் ஒரு புதுமையான

எமது இந்தப் பயிற்சியில் இணைந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இந்தப் பயிற்சிப் பட்டறையில்

பயிற்சியில் இணைய விரும்பும் மாணவர்கள், இம்முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், இளைஞர் யுவதிகள்,

சனி, ஞாயிறு பிரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| பிரிவு I | 8 - 10 | பிரிவு III | 01 - 03 பயிற்சிக்கட்டணம் 3000.00 |
| பிரிவு II | 10 - 12 | பிரிவு IV | 03 - 05 (ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்) |

**SAAMSON ENGLISH**
273, மணிக்கூட்டு வீதி, யாழ். (ஆஸ்பத்திரி பின்புறம்) TEL:0776214567

இந்த வருடம் O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட

**O/L Offer**



| | |
|---|---|
| Intel Pentium Core 2 Duo | (3 Year) |
| Intel Chip Mother Board | (3 Year) |
| 2 GB DDR3 RAM | (3 Year) |
| 80 GB Sata HDD | (1 Year) |
| DVD Writer Lite on | (1 Year) |
| ATX Casing | (1 Year) |
| 16" LCD HP | (3 Year) |
| Keyboard | (1 Year) |
| Mouse | (1 Year) |
| UPS DCP | (1 Year) |

இச் சலுகை 7 நாட்கள் மட்டும்

**Just Pay 15,000/=**

Marsha Systems (PVT) Ltd
யாழ்ப்பாணம் 74, Kannathiddy Road, Jaffna. T.P No :- 021 222 9418
நெல்லியடி MMV Road, Nelliyady, T.P No :- 021 492 3561
வல்வெட்டித்துறை 10, Modern Market, V.V.T T.P No :- 021 492 3404
கிளிநொச்சி 74, A9 Road, Ananthapuram T.P No :- 021 492 3525

## யாழ் மாணவர்களே.......!

**UK** இல் கல்விக்கு பழமை, பெருமை வாய்ந்த Oxford மாநகரில் அமைந்துள்ள AZAD பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கான வாய்ப்பு- 2012 ஆண்டுக்குரிய அனுமதிகள் யாழ் மண்ணிலே பல்கலைக்கழக உத்தியோகஸ்தர்களால் வழங்கப்படுகின்றன.
Spot Admissions (HOTEL GREEN GRASS)

**Study in the UK**
**AZAD UNIVERSITY**
OXFORD welcome students from Sri Lanka



Door opens for
January / February
**2012 INTAKE**
*Highly Trusted sponsor rating by UKBA*

**Spot Admissions by AZAD University official.**
Mr. Kathir Suhanthan International Student Recruitment Officer from AZAD University will conduct Spot Interviews.The suitable candidates can receive an offer letter...

International foundation year with IELTS 4.5 & only with G.C.E O/L at special fees of £4300

**Partner Universities**
Bangor University | City University London | Exeter University | Glasgow University | Kingston University | University of Hertfordshire

*PhD from Southampton University and City University London with 20 hours work rights*

**Spot Interviews on 22 th of December 2011**

Date: 22-12-2011
Time : 10.00am - 5.00pm
Place: 33 Aseevatham Lane, Hospital Road, Jaffna

- PhD from Southampton University and City University London with
- 20 hours work rights per week & full time work during holidays, 4years visa.
- CAS letter directly from Southampton and City University for PhD applicants.
- PhD students can bring their dependents to UK

Please call now to book your appointment **0778257887**
Please bring original educational certificates and other supporting documents

O/Level தகுதி உடைய மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப பயற்சி ஊடாக (Foundation Course) பட்டப்படிப்பைத் தொடரமுடியும். இவர்களுக்கு பல்கலைக்கழகத்தால் 1500£ பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

**உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்.........**

For More Information
Tel - +44 (0) 1865 884350
Stroud Court, Eynsham
Oxford Road, Oxford, OX29 4DA
United Kingdom

www.auo.org.uk and admissions@auo.org.uk

**University Representative Office**
No: 14, Castle Lane, Colombo 04
Tel: - 0094112555243
Email: – :-k.suhanthan@auo.org.uk

## விடுதலைப் பெருவிழா

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்

(மத்தேயு 11:28)

FREE

பாவத்திலிருந்து!!! சாபத்திலிருந்து!!! தீராத நோயிலிருந்து!!!
பில்லி –சூனியக் கட்டிலிருந்து!!! பிசாசின் பிடியிலிருந்து!!!
அடிமைத்தனத்திலிருந்து!!!

FREE

## இயேசு விடுதலை கொடுக்கிறார்...

இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை. முத்திரைச் சந்தி. நல்லூர்.
காலம்: 18 மார்கழி 2011
நேரம் : மாலை 4.00 மணி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம், பிரவேசம் இலவசம்**

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
இல.673 பருத்தித்துறை வீதி , நல்லூர்.
தொலைபேசி: 212226730

கடந்த நாள்களில் கிடைக்கப்பெற்ற அற்புதக் காட்சிகளில் சில:



யசீலா அருமைத்துரை
(அரசடி, நல்லூர்)

சிறுநீரகம் மற்றும் கால் நரம்புகள் செயலிழந்த நிலையில் நடக்க முடியாமல் இருந்தபோது ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகத்தை இயேசு கொடுத்தார்.



அன்ரன் மேரி சுலோஜினி
(குருநகர்)

4 வருடங்களாக (15–19 வயதுகளில்) பிசாசின் பிடியில் சுயநினைவின்றி வாழ்ந்துவந்த எனக்கு திருச்சபை ஆராதனையில் பங்குபற்றி ஜெபித்தபோது பரிபூரண சுகத்தை இயேசு தந்தார்.



அருள்நாயகம் சுரேஸ்
(4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்)

2 கண்களிலும் 7 வயதிலிருந்து பார்வை குன்றி காணப்பட்டது. 5 தடவைகள் சத்திரசிகிச்சை மூலம் முயற்சித்தும் கிடைக்கப்பெறாத பார்வையை ஜெபத்தின் மூலம் இயேசு பார்வையைகொடுத்தார்.

## நத்தார் புதுவருட விசேட சலுகை!!!

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD, Vedioகள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL



மிக விரைவாக
உங்கள் உறவுகளின்
இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

உலக நாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணமாக 600 /= இருந்த அறவிடப் படுகின்றது

220க்கு மேற்பட்ட நாடுகளுக்கு
மிக குறைந்த கட்டணத்தில்
உங்கள் உறவுகளுக்கு
தேவையானஅனைத்து
பொருட்களை அனுப்பிட



DHL WORLDWIDE EXPRESS

**திருமுருகன் கொம் நெற்**
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.
2b நெல்சன் பிளேஸ், கொழும்பு - 6

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.